பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 28 வெள்ளிக்கிழமை (12-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:229

# அமைதி முயற்சி குறித்து ரணில் புஷ்ஷுடன் நேரடியாகப் பேச்சு!

## அமெரிக்காவில் விரைவில் சந்திப்பு

கொழும்பு,ஜூலை12

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்கின்றார். இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து அமெரிக்காவில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரில் விளக்கமளிப்பார்.**

"இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளை அறிவதில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மிகுந்த ஆர்வமாக இருக்கின்றார். இதன் காரணமாகவே இலங்கைப் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கான கோரிக்கைக்கு எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்காமல் அவர் இணங்கினார்."

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீஎல். பீரிஸ்.

நேற்று, அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற பத்திரிகையா

(14ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் புலி உறுப்பினர் அதிரடிப் படையினரால் கைது!

காரைதீவு,ஜூலை12

காரைதீவு விசேட அதிரடிப் படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர் மங்கையன் கல்முனைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இச்சம்பவம் நேற்று நண்பகல் கல்முனையில் இடம்பெற்றது.

'ஆள்கடத்தல்' குற்றச்சாட்டின் பேரில் புலி உறுப்பினர் மங்கையன், வான் சாரதி சபாரத்தினம் சுந்தரலிங்கம், வான்கிளினர் சின்னத்தம்பி ரமேஸ ஆகியோர் கல்முனைப் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். வானில் ஆயு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சர் பிரதமர் ரணிலை சந்தித்தார்!

### சமாதான முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினர்

கொழும்பு,ஜூலை12

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்துப் பேசினார். தற்போதைய சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக பிரதமர் ஜஸ்வந்த் சின்ஹாவுக்கு விளக்கமளித்தார்.

அலரி மாளிகையில் நேற்று மாலை பிரதமருக்கும் சின்ஹாவுக்கும் இடையிலான இந்தப் பேச்சுக்கள் இடம் பெற்றன.

நேற்று நண்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்திய வெளிவிவகார அமைச்சரை வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ வரவேற்றார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## எமது உறுப்பினர்கள் இனி கைதானால் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்

### திருமலை மாவட்ட தளபதி பதுமன் எச்சரிக்கை

தம்பலகாமம்,ஜூலை12

எமது உறுப்பினர்கள் இனிக் கைது செய்யப்பட்டால் சூழ்நிலைக்கு தகுந்தவாறு பதில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி நேரிடும் என்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி பதுமன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று நடந்த கண்காணிப்புக் குழுவுடனான உயர்மட்ட சந்திப்பில் அவர் இப்படித் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்ட் புருகோவிட், சமாதானச் செயலணியைச் சேர்ந்த கலாநிதி குணவர்த்தனா, விங்கொமாண்டர் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் தரப்பில் பதுமன், புலித்தேவன், திலக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்பூரில் ஒன்றரை மணிநேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில், மூதூரில் நடந்த சம்பவங்கள், விடுதலைப் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

இதுவரை தமது தரப்பில் 8 போராளிகள் கிழக்கில் கைது செய்யப்பட்டதாகவும் -

எம்மை ஆத்திரமூட்டும் வகையில இந்த நடவடிக்கைகள் அமைகின்றன என்றும் -

இனிமேல் போராளிகள் கைது செய்யப்பட்டால் கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் -

எனவே எமது போராளிகள் கைது செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் - பதுமன் அங்கு தெரிவித்தார்.

இலங்கை அரசிடம் இது தொடர்பான உறுதியை பெற்றுத்தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்

(ம-3-10-144-145)

## சகாவை கொன்ற சிப்பாய் பின்னர் தற்கொலை!

### காங்கேசன்துறையில் சம்பவம்

வலி.வடக்கு,ஜூலை12

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைப் பகுதியில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் சக சிப்பாயைச் சுட்டுக் கொலைசெய்துவிட்டு, பின்னர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம இரவு 8.30மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நான்காவது படைப்பிரிவைச் சேர்ந்த ரணசிங்க ஆராட்சிலாகே சுமித் சமரசிங்க (வயது 28) என்ற சிப்பாய் தன்னுடன் பணியில் இருந்த சிப்பாயான உம்பப தேவயலாகே அனுரத்த குணசிறி (வயது29) என்பவரை சுட்டுக் கொலை செய்ததாகவும் -

அதன் பின்னர் தன்னைத் தானே சுட்டு அவர் தற்கொலை செய்ததாகவும் -

விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கூறப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் திங்களன்று எதிர்ப்புப் பேரணி நடத்த முடிவு

சாவகச்சேரி,ஜூலை12 -

புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ள விடயங்களை துரிதமாக நடைமுறைப்படுத்தி, சமாதானத்தை விரைவில் கட்டி எழுப்புமாறு கோரி தென்மராட்சியில் எதிர்வரும் திங்கட்கிழமை பேரணி ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று நடந்த பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலில் இந்தப் பேரணி குறித்து முடிவு செய்யப்பட்டது.

தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணி சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பிருந்து ஆரம்பமாகும் நகர வீதிகள் ஊடாகச் சென்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முடிவடையும்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுமக்கள் குடியிருப்புக்களில் படையினர் முகாமிட்டிருப்பது, -

விவசாய நிலப்பரப்பில் நெல் விதைக்க விதிக்கப்பட்டுள்ள தடை-

ஆகியவற்றைக் கண்டித்தும் இப் பேரணி நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3-31)



## வைகோ கைது!

சென்னை,ஜூலை12

அமெரிக்காவிலிருந்து மும்பாய் ஊடாக நேற்று மாலை சென்னை திரும்பிய ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ பெரும் பரபரப்புக்கு மத்தியில் சென்னை விமான நிலைய வாசலில் வைத்து விசேட பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக, வைகோவுக்கு எதிராக, 'பொடா' சட்டத்தின் கீழ் பிணையில் வெளிவரமுடியாது கைது உத்தரவை திருமங்கலம் நீதிமன்றம் பிறப்பித்திருந்தது தெரிந்ததே. அந்த உத்தரவின் கீழேயே வைகோ நேற்று கைது செய்யப்பட்டார்.

அமெரிக்கா சென்றிருந்த, வைகோ நேற்று அதிகாலை மும்பாய் திரும்பினார். மும்பாய் விமான நிலையத்தில் வைத்து அவரைத் தமிழகப் பொலஸார் கைது செய்வர் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அப்படி எதுவும் நடக்கவில்லை.

ஆனால், அவரை சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்வதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு முழு அளவில் செய்திருந்தது.

விமான நிலையத்தில் மூன்று கமபனி அதிரடிப் பிரிவு பொலீஸார் குவிகப்பட்டிருந்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் எங்கும் மூவாயிரத்துகும் அதிகமான ம.தி.மு.க.தலைவர்களும் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

விமான நிலையச் சுற்றாடலுக்குள் பிரவேசித்த ம.தி.மு.க. அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை மும்பாயிலிருந்து சென்னைக்கு வைகோ பயணம் செய்யவிருந்த விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் புறப்படுவது தாமதமானது. வைகோ வேறு விமானத்தில் புறப்பட்டு நேற்று மாலை 4.30 மணியளவில் சென்னை வந்திறங்கினார்.

மாலை 5.15 மணியளவில் அவர் விமானநிலையத்தை விட்டு வெளியே வந்தார்.

நேற்றுக் காலை முதல் வைகோவை எதிர்பார்த்து விமான நிலையத்தில் பெருங் கூட்டமாகக் காத்து நின்ற பொலீஸார் அவரை உடனே கைது செய்தனர்.

அவரை, தமது வானில் ஏற்றிய பொலீஸார் பலத்த பாதுகாப்போடு அந்த வாகனத்திலேயே அவரை திருமங்கலத்துக்குக் கூட்டிச் சென்றனர்.

இன்று காலை அவர் திருமங்கலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்

(14ஆம் பக்கம் பார்க்க)



இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கைது செய்தாலும் புலிகளுக்கான எனது ஆதரவைத் தொடர்வேன்!

## மும்பாய் விமான நிலையத்தில் வைகோ பேட்டி

மும்பாய்,ஜுலை12

புலிகளுக்கு எனது ஆதரவு தொடரும் என்று நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பிய வைகோ மும்பாய் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறியிருக்கிறார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"ஜெயலலிதா அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளார். தமிழகத்தில் சட்டம், ஒழுங்கை நான்கெடுத்தேனா? இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும், தமிழகத்தில் வாழும் தமிழர்களுக்கும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக பாரம்பரியத் தொடர்பு இருந்து வருகிறது.

"அவர்களுக்கு ஒரு சிரமம் வந்தால் அதற்காக குரல் கொடுப்பது தவறா? இலங்கைத் தமிழர் பிரச்சினையை புலிகளைக் குறிப்பிடாமல் பேசிவிட முடியுமா? புலிகளால் தான் இன்று அங்கு தமிழர்களுக்கு விடிவு ஏற்பட இருக்கின்றது. அதைச் சொன்னால் எப்படித் தவறாகும்?

"நான் புலிகளை அழைத்து தமிழகத்தில் ஒரு கிளையை ஆரம்பிக்கச் சொல்லவில்லை. புலிகளை இலங்கையில் ஆதரிக்கிறோம். புலிகள் இல்லாமல் இலங்கை தமிழர் பிரச்சினை தீராது.

"பலஸ்தீன பிரச்சினையில் யஸீர் அரபாத்தை குறிப்பிடாமல் பேசமுடியுமா? வட அயர்லாந்து பிரச்சினையில் போராட்டக்காரர்களை ஒதுக்கிவிட்டு பேச முடியுமா? அது மாதிரித் தான் இலங்கைப் பிரச்சினையில் புலிகள் குறித்தும் பேசினேன். இது தவறா?

"அடுத்தடுத்து வந்த இலங்கை அரசுகளால் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலைகள் செய்யப்பட்டதைக் கண்டித்தேன். இந்தத் தமிழர் படுகொலைகளைத் தடுத்த புலிகளை ஆதரித்தேன்.

"தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு குறித்து ஜெயலலிதா உண்மையிலேயே கவலைப்படுபவரா? ஜெயலலிதாவுக்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது தமிழகம் முழுவதும வன்முறையைத் தூண்டிவிடுமாறு அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் இருந்து அக்கட்சியினருக்கு உத்தரவு போனது.



மும்பாய் விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கும் வைகோ.

"அதையடுத்து பஸ்களை எரித்தார்கள்; தர்மபுரியில் விவசாயக் கல்லூரி மாணவிகள் சென்ற பஸ்ஸை கொளுத்தினார்கள்; உயிருக்காக மன்றாடிய அந்த மாணவிகளை எரித்தவர்கள் தான் ஜெயலலிதாவின் கட்சியினர். 3 பேர் பஸ்ஸில் சாம்பலானார்கள்.

"இந்த ஜெயலலிதா எப்படி தமிழகத்தில் சட்டம், ஒழுங்கைப் பற்றிப் பேசலாம்? நான் மாநிலத்தின் அமைதியை சீகுலைப்பதாக கூறி என்னை ஜெயலலிதா கைது செய்வது வேடிக்கையானது.

"இதனால் நான் கொஞ்சமும் கலங்கி விடமாட்டேன். எங்களுக்கு சவால் விடுள்ள ஜெயலலிதாவை சந்திப்போம். இந்த விவகாரத்தில் மத்திய அரசின உதவியைக் கோரமாட்டேன். மாநில அரசின் விவகாரத்தில் மத்திய அரசு தலையிடக் கூடாது என்று கருதுபவன நான். இதைச் சட்டப்படி சமாளிப்பேன். என்னால் மத்தியில் தேசிய ஜனநாயக அரசுக்கு எந்த சங்கடமும் வராமல் பார்த்துக்கொள்வேன்.

"தமிழகத்தில் தனக்கு எதிராக யாரும் இருக்கக் கூடாது என்ற அகந்தையின் வெளிப்பாடுதான் இந்தக் கைது. எனது கட்சியினரை சிறையில வைக்க ஆரம்பித்துவிட்ட ஜெயலலிதாவை சட்ட ரீதியில் சந்திப்போம். தெருக்களில் போராடி வெல்வோம். அதே நேரத்தில் மாநிலத்தில் எந்த விதமான சட்டம் ஒழுங்கு பிரச்சினையையும் ஏற்படுத்தமாட்டோம்.

"தமிழக மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் இருந்தும், அரசின் தோல்விகளில் இருந்தும் மக்களை திசை திருப்ப ஜெயலலிதா நடத்தும் நாடகம்தான் இந்தக் கைது" - என்று கூறினார் வைகோ.

வைகோ கைது செய்யப்பட்டதை எதிர்த்து இன்று தமிழகம் முழுவதும் பெரும் எடுப்பில் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் -

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத விதத்தில் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் -

ம.தி.மு.கவின் தலைவர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## 3ஆயிரம் ம.தி.மு.கவினர் நேற்று கைது!

சென்னை,ஜுலை12

ம.தி.மு.க. தலைவர் வைகோ கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு முழுவதும் சுமார் 3ஆயிரம் ம.தி.மு.க. தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு முதலே இந்தக் கைது நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

கோயம்புத்தூரில் 230பேரும் அப்பகுதி ம.தி.மு.க. இளைஞர் அணிச் செயலரும் கைதுசெய்யப்பட்டனர். மதுரையில் 250 தொண்டர்கள் இரவில் அவர்களது வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றது. மேலும் பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## வாக்குமூலம் அளிக்கப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,ஜுலை12

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர் குழுக்களுக்கிடையே கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸாரிடம் வாக்குமூலம் அளிக்குமாறு சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களை யாழ். பல்கலைக்கழக பதிவாளர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்கு அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய மாணவர்களின் விவரங்கள் யாழ்.பொலீஸ் நிலையத்திற்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-ரி)

## வைகோவைக் கைது செய்தது அப்பட்டமான துஷ்பிரயோகம்

### ராமதாஸ் தெரிவிப்பு



பொடா சட்டத்தை பயன்படுத்தி வைகோவை கைது செய்வது அப்பட்டமான துஷ்பிரயோம். இது தமிழ்நாட்டில் தற்போது உள்ள பல்வேறு பிரச்சினைகளை திசை திருப்புவதற்கான முயற்சி. தமிழ்நாட்டில் தற்போது விடுதலைப்புலிகள் மூலம் எந்தவித பயங்கரவாதமும் இல்லை. எல்லை தாண்டி வரும் பயங்கரவாதத்தை தடுக்கத்தான் பொடா சட்டம் கொண்டு வரப்பட்டது.

- இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

வைகோவின் கைது குறித்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

2001 ஆம் ஆண்டு அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், இலங்கைத் தமிழர்கள் உரிய உரிமை பெறவும் சுயமரியாதையுடன் கூடிய அமைதியான வாழ்வு பெறவும் மத்திய அரசை வற்புறுத்துவோம் என்று உள்ளது.

விடுதலைப் புலிகள் இல்லாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பது இலங்கை அரசுக்கும் இந்தியா, நோர்வே, அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுக்கும் தெரியும்.

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது என்பது வேறு, அவர்களுக்கு உதவி செய்வது என்பது வேறு. எனவே விடுதலைப்புலிகளை ஆதரித்தார் என்பதற்காக வைகோவை கைது செய்வது அரசியல் ரீதியான பழிவாங்கும் நடவடிக்கை ஆகும்.

ஈழத் தமிழர் பிரச்சினையை பொறுத்தவரை நாங்களும் விடுதலைப் புலிகளின் கொள்கைகளை ஆதரிக்கிறோம். ஆனால் உதவி செய்யவில்லை. ஜனநாயகத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமை அனைவருக்கும் உண்டு. அதற்காக எந்தத் தொடர்பும் இல்லாமல் ஒருவரைத் கைது செய்வது தவறானது. பொடா சட்டத்தின்படி வைகோவை கைது செய்வது தேவையற்ற பிரச்சினை.

இது போன்ற காரணங்களை வைத்து எங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று கூறப்படுவது யூகத்தில் வெளியாகும் செய்தி. இதற்கு நான் எந்தப் பதிலும் அளிக்கவிரும்பவில்லை - என்றார்.

(ம)

## இன்னுமொரு யுத்தம் வெடிக்கும்போது கரும்புலிகளின் மகத்துவம் புரியும்!

### புதுவை இரத்தினதுரை உரை

யாழ்ப்பாணம்,ஜுலை12

தற்போதைய சமாதான முயற்சிகள் முறிவடைந்து மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்குமானால் அதன்பிறகுதான கரும்புலிகள் யார் என்பதையும் அவர்களின் மகத்துவத்தையும் மக்களும், உலகமும், எதிரிகளும் சரியாக உணர்ந்து கொள்வார்கள்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

- ஓட்டோ சங்கம், மினிபஸ் சங்கம் மற்றும் ஒலிப்பதிவுக் கூட உரிமையாளர்களுடனான சந்திப்பு ஒன்று நேற்று கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதில்.கலந்துகொண்டு உரையாற்றிய புதுவை இரத்தினதுரை மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்பதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கிறோம்.

எமது மக்களும் நாமும் ஏன் பெரும்பாலான இராணுவத்தினரும் கூட சமாதானம் கிடைக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன்தான இருக்கின்றார்கள்.

இப்பொழுதும் கூட புலிகள் எமது மக்களுக்காகத் தமது உயிரை கொடுப்பதற்கு தயாராகவே இருக்கிறார்கள். எப்போதுமே தமது சாவை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களை விட கரும புலிகளின் படையணி எம்மிடம் இருக்கிறது. கரும்புலிகள் படையணி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றது.

அவர்களின் தியாகத்தை எவருமே மதிப்பிட முடியாது. அவர்களின் வரலாறுகள் மிகவும் வித்தியாசமானவை.

கரும்புலி கப்டன் மில்லரை வழியனுப்பி வைத்ததிலிருந்து கட்டுநாயக்கா மீது தாக்குதல் நடத்தச் சென்ற கரும்புலிகளுடன் பழகியது வரைக்கும் அவர்களுடன் மிகவும் பரீட்சயமானவன் என்ற ரீதியில் அவர்களின் நெஞ்சுறுதிமிக்க வரலாறுகளை அறிந்து வைத்திருக்கிறேன்.

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான வெற்றி எவ்வளவு பெறுமதியானது என்பதை நாங்களே இன்னமும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

கரும்புலிகளின் நீண்ட தியாக வரலாற்றையும் அற்புதமான வாழ்வையும் எமதுமக்கள் இன்னமும் நன்றாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

அவர்களின் நெஞ்சுறுதியையும், வீச்சையும் கொள்கையையும் நாங்கள் விளக்கிக் கூறினால் எவருமே நம்பமாட்டார்கள்.

இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்று அதிர்ந்து போவார்கள்.

எனவே இப்படியான கரும்புலிகளின் படையணி இருக்கும் வரை நாங்கள் எதற்கும் கலங்கத் தேவையில்லை.

விடுதலைப் புலிகளின் வெளிப்படையான நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும்தான் கண்ணுக்குத் தெரிகிறது.

ஆனால் அதற்குப் பின்னால் உள்ள அவர்களின் தியாகங்களும் ஈகங்களும் உணர்வுகளும் கண்ணுக்குத் தெரியாதவை.

காலப்போக்கில் அவையெல்லாம் எமது மக்களுக்குத் தெரிய வரும் என்றார்.



நேற்றைய கலந்துரையாடலின்போது தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம்:அற்புதன்)*

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பிரமுகர் பாப்பா உரையாற்றும்போது கூறியதாவது:-

சமாதான முயற்சிகள் ஓரளவு முன்னேற்றமடைந்து செல்கின்றன. பொருளாதாரத் தடை நீக்கம், பாதை திறப்பு, அவற்றை தொடர்ந்து பொது இடங்களில் உள்ள படைமுகாம்கள் ஓரளவுக்கு வாபஸ் பெறப்படுகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் அரசு ஒழுங்காக நிறைவேற்றுவரை பேச்சுக்கே இடமில்லை. கடந்த காலங்களைப் போல எம்மை இனி மேல் எவரும் ஏமாற்றமுடியாது.

சமாதான காலத்தில் சமாதானத்துக்காக போராளிகளை இழக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். எமது மக்கள் விரும்பும் சமாதானத்துக்காக நாம் எவ்வளவு தியாகங்களையும் செயயத் தயாராகவே இருக்கிறோம். திருகோணமலையில் எமது போராளிகள ஐந்து பேர் படையினரால் கைது செய்யப்பட்டார்கள். தீவுப் பகுதியிலேயே இரண்டு போராளிகள் கடற்படையினராலும் ஈ.பி.டி.பியினராலும் தாக்கப்பட்டார்கள்.

இந்த நடவடிக்கைகள் நடைபெற்ற பின்னர் நாங்கள் யுத்தத்தை தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் எமது தலைவர் எம்மை இங்கு அனுப்பும் போது எமக்கு சொல்லி விட்ட கருத்துக்களால்தான் நாம் பொறுமையாக இருக்கிறோம். எத்தகைய இன்னல்கள் வந்தாலும் மக்களுக்காக அவற்றைப் பொறுத்துக் கொள்ளுமாறு தலைவர் எம்மிடம் கூறியுள்ளார்.

அதன் மூலம் சமாதான விரோதிகள் யார் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளும்.

கரும்புலிகளின் உறுதி வாய்ந்த தியாகத்தினால்தான் நாம் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறோம். எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கூட பல காலம் வாழ்ந்துவிட்டு தருணம் வரும் போது தமது இலக்கை தாக்கி வெடித்துச் சிதறுகின்ற அவர்களின் உறுதி வியந்து போற்றப்பட வேண்டியது - என்றார்.

இக் கலந்துரையாடலில் நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதனும் கருத்துரை வழங்கினார். அண்மையில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் வன்னியில் வெளியிட்டு வைக்கப்பட்ட கரும்புலிகள் மற்றும் கடற் கரும்புலிகளின் இசைத் தட்டுக்கள் மற்றும் ஒலி நாடாக்கள் என்பனவும் விநியோகிக்கப்பட்டன. (ம-4)




எம்.ஜி.ஆர்., கவிஞர் வைரமுத்து, 'கல்கண்டு' தமிழ்வாணன் ஆகியோருக்கு கனடிய அஞ்சல் திணைக்களத்தின் ஒப்புதலுடன் செந்தியின் ஆதவன் பிரசுராலயத்தின் 'தமிழ் வழிகாட்டி' ஸ்தாபனத்தினர் வெளியிட்ட தபால் தலைகள் இவை.

# அமெரிக்காவுக்குப் பாடம் புகட்ட தற்கொலைப் படையினர் தயார்!

## அல்கெய்டா எச்சரிக்கை

அல்ஜியர்ஸ்,ஜுலை12

"அமரிக்காவுக்குத் தகுந்த பாடம் புகட்டுவதற்கு எமது தற்கொலைப் படையினர் மீண்டும் தயாராகி விட்டனர்! இவ்வாறு அல்-கெய்டா இயக்கத்தின் செய்தித்தொடர்பாளர் சுலைமான் அபு காய்த் எச்சரித்துள்ளார்.

அல்ஜீரியாவில் இருந்து வெளிவரும் 'அல் ஜோம்' என்றபத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றிலேயே சுலைமான் இதனைத் தெரிவித்துள்ளாா. அப்பேட்டியில் அவர் கூறியுள்ளதாவது:-

'தீவிரவாதத்திற்கு எதிரான போா' எனக் கூறிக்கொண்டு தீவிரவாதிகளை அடியோடு ஒழிக்கப்போவதாக அமெரிகா கூறுவது சினிமாக் கதைவசனம் பேசுவதைப் போன்றது. தீவிரவாதி களை அமெரிக்காவால் ஒழித்துவிட முடியாது.

அமெரிக்காமீது மீண்டும் மிகப் பெரிய தாக்குதல்களை நடத்த இருக்கிறோம். எந்தெந்த இடங்களில் தாககுதல்கள் நடக்கும் என்பதை இப்போது கூறமாட்டேன். ஆனால், அமெரிக்காவுக்கு உள்ளேயும் வெளியேயும் அமெரிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும். இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் முஸ்லிம்கள் பெருதும் மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸாமா பின்லேடன் உட்பட அல்-கெய்டாத் தலைவர்கள் அனைவரும் நலமுடன் உள்ளனர். தலிபான தலைவர் முல்லா முகமட் ஒமரும் நலமாக இருக்கிறார். அல்-கெய்டா அமைப்பினர் ஓர் இராணுவ அமைப்புப்போன்று கட்டுக்கோப்புடன் உள்ளனர். அவர்கள் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் ஈடுபடவும் தயாராக உள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்த அமெரிக்காவைப் பழிவாங்க எமது உறுப்பினர் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

- இவ்வாறு சுலைமான் தனது பேட்டியில் கூறியுள்ளார். (ஒ-9)

# முஷாரப்பை கொல்ல முயற்சி; பாக்.இராணுவ அதிகாரி கைது!

இஸ்லாமாபாத்,ஜுலை12

பாகிஸ்தானின் அதிபர் பர்வேஷ முஷாரப்பை கொலை செய்வதற்கு நடந்த சதி தொடர்பாக பாகிஸ்தானின் இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முஷாரப்பின் கார் செல்லும் பாதைகள் குறித்து அவர் தீவிரவாதிகளுக்குத் தகவல் கொடுத்தமை விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாக பாகிஸ்தானிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக 'ஹர்கதுல் முஜாகிதீன்' தீவிரவாத அமைப்பைச்சேர்ந்த முகமது இம்ரான், முகமது ஹனிப், ஷேக் முகமது அகமது ஆகிய மூவரையும் பாகிஸ்தானியப் பொலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். மூவரும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன் முஷாரப்பின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றி வந்த இராணுவ அதிகாரி வாசிம் அக்தாரும் பாகிஸ்தானியப் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். (ஒ-9)

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி**

சிறுப்பிட்டி கலைமகள் சனசமூக நிலைய
கட்டட வளர்ச்சி நிதிக்கான
மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம்:- நீர்வேலி சவாரித்திடல்
காலம்:- 14.07.2002 ஞாயிறு பி.ப.1.30மணி
பிரவேசம் 10/=
(5886) - நிலைய நிர்வாகம்.

# பாலசிங்கம் நீண்டநாள்கள் வாழ வேண்டும் - வைகோ பேட்டி!

**தமிழகக் கட்சியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தனக்குள்ள நல்லுறவை - நெருக்கத்தை என்றுமே மறைத்ததில்லை. சமீபத்தில்கூட லண்டனுக்குச் சென்ற வைகோ, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துவிட்டே திரும்பியிருந்தார். அந்தச் சந்திப்புக் குறித்து அவரது பேட்டி ஜுலை15 திகதியிட்ட குமுதம் இதழில் வெளியாகியுள்ளது. அப்பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.**

*கேள்வி:* பாலசிங்கத்தைப் பார்ப்பதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் இருந்ததா?

*வைகோ:* "அவர் ஒரு சிறுநீரக நோயாளி. அவரது உடல் நிலை பற்றி எனக்குக் கவலையாக இருந்தது. அவரைச் சந்தித்து அது பற்றிக் கேட்கவேண்டும் என்று விரும்பினேன். அவர் நீண்டநாள் உயிரோடு இருக்க வேண்டும். அதற்காகவே அவரை நான் சந்தித்தேன். வேறு எந்த நோக்கமும் இல்லை!

"அவர் உயிரைக் காப்பாற்றுவதில் நோர்வே அரசு மிகவும் அக்கறை காட்டுகிறது. நோர்வே அரசு தனது செலவிலேயே அவருக்கு அறுவைச்சிகிச்சையைச் செய்தது. பிரிட்டிஷ் அரசும் அவர்மீது மிகவும் பரிவுடன் இருக்கிறது. நான் அங்கு இருக்கும்போதே பிரிட்டிஷ் அரசு தரப்பிலிருந்து அவருடைய உடல்நலம் குறித்து விசாரித்து தொலைபேசி வந்தது.

"அவரின் மனைவி அடேல் தமிழ்க் கலாசாரத்தில் ஒன்றிப்போனவர்போல் பாலசிங்கத்தைக் கவனித்துக்கொள்கிறார். அவர்களுக்குக் குழந்தை இல்லை. தன் கணவனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். 'அவர் ஒரு பொக்கிஷம். அவரைக் காப்பாற்றியே ஆகவேண்டும்' என்றார் என்னிடம் அடேல்."

*கேள்வி:* இலங்கை அரசுடன் புலிகளின் பேச்சு நடைபெறுமா? அல்லது தடைகள் இருக்குமா? பாலசிங்கம் என்ன தெரிவித்தார்?

*வைகோ:* "சமாதானத்தீர்வு ஏற்படுவதற்கும் பேச்சிற்கும் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்திலே முக்கியமானது, வழிபாட்டுத் தலங்கள், கல்விச்சாலைகள், மருத்துவமனைகளில் இருக்கும் இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்பதுதான். ஆனால், இராணுவம் இன்னும் அங்கேயேதான் இருக்கிறது. மீனவர்கள் கடலுக்குச் சென்று தொழில்செய்ய முடியவில்லை. ஆனால், சீனாவோடு இலங்கை ஒப்பந்தம் ஒன்றைப் போட்டிருக்கிறது - 'சீனக்கப்பல் வந்து மீன் பிடிக்கலாம்' என்று.

"இந்தப் பிரதேசத்தில் சீனா நுழைய நீண்டநாள்களாகத் துடித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ரொம்பநாளாகவே இந்தப் பகுதி மேலே ஒரு கண். இந்தக் கடலாதிக்கம் தன்கையில் வரவேண்டும் என்று அமெரிக்கா நெடுங்காலமாகத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கிழக்காசியப் பகுதியில், குறிப்பாக இந்துமா கடலிலே பெரிய தளம் தேவைப்படுகிறது. அதனால் தான் திருகோணமலையின் மீது கண்வைத்துக்கொண்டே இலங்கை அரசை ஆதரித்து வந்தார்கள்.

"இது எதிர்காலத்தில் இந்தியாவின் பூகோள, அரசியல் நலன்களுக்கு எதிராக இருக்கும் என்பதால் இந்திராகாந்தி அம்மையார் தொலைநோக்குச் சிந்தனையோடு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். இப்போது, சந்திரிகா அரசு அமெரிக்காவோடு ஓர் ஒப்பந்தம் போட்டுள்ளது. அமெரிக்கப் போர்க்கப்பல்கள் திருகோணமலை வரலாம்; கொழும்பு வரலாம்; அங்கேயே கொஞ்சநாள் நிறுத்தி வைத்திருக்கலாம்; எரிபொருள் நிரப்பிக்கொள்ளலாம் - என்று. ஆக ஒட்டகம் மூக்கை உள்ளே நுழைத்த கதைதான் இது. தமிழகத்துக்கு பெரும் ஆபத்து என்பது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்து."

*கேள்வி:* அடுத்த கட்டப் பேச்சு எப்பொழுது நடைபெறும் என்று பாலசிங்கம் சொன்னாரா?

*வைகோ:* "இந்தப் பேச்சுக்கு எவ்வளவு முட்டுக்கட்டை போடமுடியுமோ அவ்வளவையும் சந்திரிகா போடுகிறார். இது என்னுடைய கருத்து. பிரதமர் ரணில் உண்மையிலேயே பேச்சு நடத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கிறார். முழு அதிகாரமும் அந்த அம்மையார்க்கிட்டே இருப்பதனால் அவர் இந்தப் பேச்சு நடக்கக்கூடாது, போர்நிறுத்தம் நீடிக்கக்கூடாது என்று நினைக்கிறாங்க.


அன்ரன் பாலசிங்கம் தம்பதியுடன் வைகோ.

இராணுவம் அவரின கீழ்தான் உள்ளது. அதனால் ஏதாவது ஒரு கட்டத்தில் பேச்சைத் தடுக்க வேண்டும் என்று நினைக்கிறாங்க. சிங்களவர்களே சந்திரிகாவின் கட்சியைத் தேர்தலில் ஒதுக்கினாங்க. காரணம் ரணில் வந்தால் தமிழர்களுடன் சமாதானத்திற்கு நடவடிக்கை எடுப்பார் என்பதற்காக. மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்."

*கேள்வி:* இறுதித் தீர்வு ஏற்படுமா?

*வைகோ:* "பேச்சு நடக்கட்டும் அவர்களுக்கும் அடிப்படையான சில கோரிக்கைகள் இருக்கும் இல்லையா? அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளட்டும். அதற்குப் பிறகு மாற்றுத் திட்டம் என்று எதைக் கேட்கிறார்கள்? அவர்களது தாயகம் இந்திராகாந்தி அம்மையாரே சொன்னதுதானே - சுயநிர்ணய உரிமையை அவர்களுக்குக் கொடுக்கலாம். சுயநிர்ணய உரிமை என்பது தனிநாடாகப் பிரியவேண்டும் என்பதல்ல. தமிழர் இனம் என்பது தனித் தேசிய இனம். இந்த அடிப்படைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் அதற்குப் பிறகு மாற்றுத் திட்டத்தைப் பரிசீலிப்பதாகக் கூறுகிறார்கள். அதைத்தான் பிரபாகரன் கிளிநொச்சியில் சொன்னார்."

*கேள்வி:* தமிழ் நாட்டு சட்ட சபையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே? அதைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? குறிப்பாக அ.தி.மு.க., தி.மு.க. நிலையைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

*வைகோ:* "அதைப்பற்றி அவர்களிடம் நான் பேசவில்லை. ஆனால், அவர்களுக்குக் கொஞ்சம் கவலையாக இருந்தது - என்னது இந்த நேரத்திலே இப்படி ஒரு தீர்மானம் வருகிறதே என்று. ஆனால், தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி பேச்சு நடக்கட்டும். தீர்வு ஏற்படட்டும் என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள். நடந்த சில கருத்துக் கணிப்புகள் கூட அதைத்தான் காட்டுகின்றன."★

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1948 | 1999 |
| - | - |
| 01 | 07 |
| - | - |
| 24 | 15 |

**அமரர் தங்கவேல் சத்தியதேவன்**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உதவியாளர்)
திதி: பூர்வபக்க திருதியை (12.07.2002)

*எங்கள் குல விளக்கே! எங்கே நீ மறைந்தாயோ?*
*பொங்கும் அன்பு வெள்ளம் வற்றிப் போயிற்றோ?*
*ஆண்டு மூன்றல்ல ஆயிரந்தான் சென்றாலும்*
*எம் துயரம் தீராது எழுந்தோடி வாராயோ?*

*193, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (5884)

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள்.**

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

**முக்கிய அறிவித்தல்**

2000ஆம். ஆண்டு சாவகச்சேரியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் எமது அங்கத்தவர்களின் வாணிபப் பொருள்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்டு எடுத்துச்செல்லப்பட்டது. அப்பொருள்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையை வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் நாளை (13.07.2002) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. அதன் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக எமது மன்றப் பணிமனையில் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு கீழ்வரும் அங்கத்தவர்களைச் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

*சந்திக்கவேண்டிய அங்கத்தவர் விவரம் பின்வருமாறு:-*

| | |
|---|---|
| 1. பிள்ளையார் | 21. துவாரகா அழகு |
| 2. முருகன் களஞ்சியம் | 22. லிங்கம் சூ பலெஸ் |
| 3. மகாநதி புடைவை | 23. எழில் மாடம் |
| 4. குறிஞ்சி புடைவை | 24. திருப்பதி பென்சி |
| 5. வாணி புடைவை | 25. ஸ்கைலாஸ் பென்சி |
| 6. ரஞ்சனா புடைவை | 26. விமலாஸ் அழகு |
| 7. பிரகாஸ் புடைவை | 27. சின்னத்தம்பி அன்கோ |
| 8. நியூ செலக்சன் புடைவை | 28. செல்வம் T.P. |
| 9. வித்தியா புடைவை | 29. குகன் ஸ்ருடியோ |
| 10. பூஞ்சோலை புடைவை | 30. ஜெகா புடைவை |
| 11. தாரகை புடைவை | 31. அமிர்தாம்பிகை |
| 12. சுமங்கலி புடைவை | 32. திருத்தணிகை உதிரி |
| 13. மிதிலை அழகு | 33. கதிர்காமு துரைராசா |
| 14. சங்கரன்ஸ் பென்சி | 34. ஐடியல் |
| 15. மங்களம்ஸ் + மங்களா | 35. குமரன் ரேடேர்ஸ் |
| 16. விமலாஸ் | 36. இலட்சுமி ரேடேர்ஸ் |
| 17. கலியாணி | 37. கே.எஸ்.கே.மோட்டோர்ஸ் |
| 18. செல்வம் பென்சி | 38. முருகன் ஹாட்வெயர் |
| 19. செவ்வந்தி பென்சி | 39. தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ் |
| 20. வித்தியா அழகு (5882) | 40. ஏ.கே.எஸ். மோட்டோர்ஸ் |

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

...து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாயுள்ள M.Sc. (Computer Science) London இல் வேலை செய்யும் 32 வயதுடைய மணமகனுக்கு படித்த அதே குடும்பத்தைச் சேர்ந்த அழகுள்ள Science Degree அல்லது Computer Degree படித்த 25-28 வயது உள்ள மணமகள் தேவை தொடர்பு: 021-2554. (5860)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975ஆம் ஆண்டு பிறந்த அனுஷ நட்சத்திரம் கிரக பாவம் 42, 4இல் செவ்வாய் உள்ள லண்டனில் Accountancy இறுதி ஆண்டு படித்துக்கொண்டு இருப்பவருக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. லண்டனில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 1566 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (5846)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (5850)

## திருமண சேவை

செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி, அரச திணைக்கள நிரந்தர லிகிதர், 1968, பூசம் 4ஆம் பாதம் மணமகனும் 1969, 1972 இல் பிறந்த செவ்வாய் குற்றமற்ற ஆசிரிய மணமகன்களும் உண்டு. ஜாதகத்துடன் நேரில் வரவும். இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜென்சி, சக்தி மெடிக்கல் கட்டடம், K.K.S. வீதி, கொக்குவில். (5865)

## வகுப்பு

மிகவும் இலகுவான முறையில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க அடிப்படையில் இருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். வீடுகளிற்கு வந்து கற்பிக்கலாம். 14-07-2002 இற்கு முதல் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: இ.தேவதாஸ், 231, கோயில் வீதி, நல்லூர். (5851)

## LAND FOR SALE

3 Lachcham with two sides wall. At temple Road, Nallur. (No Brokers.) Rasa Vamadevan, 180, Point Pedro Road, Jaffna. T.P.: 021-3239 (5833)

## விற்பனைக்கு

கரவெட்டி கன்பொல்லை வீதியில் நல்ல நிலையில் உள்ள 5 1/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: க.குமாரசுவாமி, யூனியன் லேன், அரசடி வீதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி. (5758)

மிகத் தரமான F10 கமரா (Nikon) அதற்கான பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. பெறுமதி பேசித் தீர்க்கப்படும். தொடர்பு: சி.ரகு இல.53, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி. T.P.No 3134 (5862)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோவிலடியில் காணி விற்பனைக்கு உண்டு. 15-07-2002 இற்கு பின் தொடர்பு கொள்ளவும். V.குகதாசன் மே/பா கு.விசுவலிங்கம். சட்டத்தரணி மல்லாகம். (5867)

GOLD FISH மீன்கள் பெரியது. ஏஞ்சல், கலிக்கோ மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.விஜயன், 35/1, இந்துக்கல்லூரி அருகிலுள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (5876)

கல்வியங்காட்டில் 3ஆம் கட்டை வயிரவர் கோயில் முன்பாக 10 பரப்புத் தென்னங்காணியும் வயலும், 3ஆம் கட்டை ஒழுங்கையில் (பண்டாரிபுலம்) 5 பரப்புக் காணியும், விளையாட்டரங்க வீதியில் 6 பரப்புக் கலட்டிக் காணியும் செம்மணி கோரன்குளி வயலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி மா.முத்துக்குமார், 38, இராச வீதி, நல்லூர். (5874)

## தவறிவிட்டது

புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த ஆறுமுகம் இந்திரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 652211496V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கோப்பாய்க்கும், புத்தூருக்கும் இடையில், தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ.இந்திரன் நீர்வேலி ப.நோ.கூ.சங்கம். (5859)

கடந்த மாதம் 19ஆம் திகதி கொடிகாமத்துக்கும் எழுதுமட்டுவாழுக்கும் இடையில் திருமண அல்பம் (வெளிநாட்டுத் திருமணப் படம்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிறையேந்தி (சாண்டிபன்), வாடகைக் கார் உரிமையாளர், ஆஸ்பத்திரி முன்பாக, புதுக்குடியிருப்பு அல்லது மு.அருமைத்துரை, கொடிகாமம் சந்தை என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். (5834)

கருகம்பனையினைச் சேர்ந்த தம்பிராஜா கங்காதரன் ஆகிய எனது தே.அ.அ. (இல.732092790V)யும் சிறு தொகைப் பணமும் 08.07.2002 திங்கட்கிழமை கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "கரிகனன் பிறின்டேர்ஸ்", கே.கே.எஸ். வீதி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5875)

## சைக்கிள் கரியரில் அமர்ந்திருந்த பெண் தவறிவிழுந்து காயம்

ஓடிக்கொண்டிருந்த சைக்கிளின் பின்புற 'கரியரி'ல் அமர்ந்திருந்த பெண் ஒருவர் தவறிவிழுந்து படுகாயமடைந்தார்.

நவக்கிரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வசாவிளானைச்சேர்ந்த தவராசா அன்னமணி (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-15)

## சிப்பாயைக் குத்திய இருவர் கைது!

அநுராதபுரம் சாமியபுர படை முகாமில் இருந்த சிப்பாய் ஒருவரை கத்தியால் குத்திவிட்டு அங்கிருந்த இரண்டு துப்பாக்கிகளை அபகரித்துச் சென்ற இரண்டு நபர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் அதே படை முகாமில் கடமையாற்றுபவர் எனவும் - மற்றையவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாக வாழ்ந்து வந்தவரென்றும் - தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ரி-56ரக துப்பாக்கிகள், ரவைக்கூடுகள், ரவைகள் மற்றும் கைக்குண்டுகள் என்பன மீட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. (ஓ-12)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

**விசுவநாதன் விஜியகரன்**



மெய்யினில் உறுதிகொள் வழியதுநாடி
மேன்மையே பெற்றுயர் வெய்திடவேண்டி
தாய்மனம் மகிழத் தனிவழியேகி
தரைகடல் யாவும் கடந்துமே கனடா
எய்தியும் சோதரர் தமையுமழைத்து
எடுத்தநற் கருமம் இனிதுற முடித்தும்
தெய்வநற் பதவி பெற்றுமே சென்றீர்
செய்கிறோம் கண்ணீர் அஞ்சலி கோடி.

*கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.* (5881)

உன் பிரிவால் தவிக்கும்:
**உறவினர்கள்.**

# தேவை

எமது ஸ்தாபனத்திற்கு ஒட்சிசன் (Oxygen), அசிட்டலின் (Acetylene) வாயுக்களும் அது சம்பந்தப்பட்ட உபகரணங்களும் விற்பனை செய்வதற்கு, நல்ல ஆங்கில அறிவும், குறைந்தது 5 வருட விற்பனை அனுபவமுள்ள பொறுப்பதிகாரியான ஆண் தேவை. 15.07.2002 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பம், தராதரப் பத்திரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். சம்பளம், தகுதி, அனுபவ அடிப்படையில் வழங்கப்படும்.

*கந்தவேலன் றேடர்ஸ், யாழ்ப்பாணம்.* (5873) - உரிமையாளர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 16 - 09 - 1970



இறப்பு 12 - 07 - 2000

## திருமதி நவனேசன் தீபசோதி

*அம்மா.........*

அமுதூட்டி சிருடை அணிவித்து
பள்ளி செல்ல வைக்க நீயில்லை
படித்தவற்றைக் கேட்டு
பரவசப்படவும் நீயில்லை
ஆண்டு இரண்டாகி விட்டது
நிழற் படத்தையே பார்த்து
அம்மா என்கின்றோம்
நிஜமாக வரமாட்டாயா.....?.

(5861)

*'சிவமகால்' அல்வாய் வடமேற்கு அல்வாய்.*

கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

# யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் கூட்டம்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்க நிர்வாக சபைக் கூட்டம் 14.07.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறும். அனைவரும் தவறாது சமுகந்தரவும்.

க.நாகராசா. தலைவர்.



வடமராட்சியில்

# எம்.டி.குணசேன புத்தகக் கண்காட்சியும் மாபெரும் விற்பனையும்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில்
ஜூலை 12 முதல் 15வரை.
இன்று 2.30 மணிக்கு
**திரு.எஸ்.சேதுராஜா** *(கல்லூரி அதிபர்)* தலைமையில்
**திரு.தயா**
*(வடமராட்சி விடுதலைப் புலிகள் இயக்க அரசியற் பிரிவுத் தலைவர்)*
**திரு.க.சிதம்பரப்பிள்ளை**
*(ஆசிரியர், ப.நோ.கூ.ச. தலைவர்)*
உட்பட கல்வியாளர், நிர்வாகிகள், பிரமுகர்கள், படைப்பாளிகள் பலர் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.
எல்லா நூல்களுக்கும் 10% விலைக் கழிவு.
*அனைவரும் வருக!* (5878)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 04 - 1949



மறைவு 12 - 07 - 1989

## அமரர் மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா

(சில்லாலை)

*(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)*

எங்கள் அன்புருவே!
துன்பங்களால் துவண்ட எம்மிதயம்
உங்கள் பிரிவால் நிதமும் துடிக்கின்றது.

(5877)

*891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 - 06 - 1938



மறைவு 04 - 07 - 2000

## திருமதி செல்லம்மா விநாசித்தம்பி

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

திதி: 12.07.2002

*எம் குலவிளக்கை
எப்பிறப்பிற் காண்போம் இனி?*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*'தாயகம்', பளை.* (5741) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## யாக்கோப்பு பேதுறு

புலோப்பளை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யாக்கோப்பு பேதுறு நேற்று 11-07-2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யாக்கோப்பு காலஞ்சென்ற விக்ரோறியா தம்பதியினரின் சிரேஷ்ட மகனும், மாக்கிறேற்றின் அன்புக்கணவரும், புஷ்பராணி (இந்தியா), இராஜேஸ்வரன் (லண்டன்), புவனேஸ்வரன் (லண்டன்), மனோகரன் (லண்டன்), பாஸ்கரன், சிறிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தர், யாழினி, பவானி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை (பொன்னுத்துரை) மற்றும் சந்தியாப்பிள்ளை (ஓய்வூதியர்), வேதநாயகம் (கிராம உத்தியோகத்தர்), சூசைநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (11-07-2002) வியாழக்கிழமை செல்: பீற்றர் சேமக்காலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
யா.வேதநாயகம் (சகோதரன்)
(கிராம உத்தியோகத்தர்)

*புலோப்பளை கிழக்கு, பளை.* (5863)

உதயன்

## தீவக மக்களுக்கு தீர்வு வருமா?

நீண்டகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மாறாத வடுக்களைச் சுமந்து நிற்கும் வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள், யுத்தநிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பவை வந்தபோது பெரிதாக எதிர் பார்த்தார்கள்; தமது வாழ்வில் அமைதி, வசந்தம் வீசப்போகின்றது என்று மனப்பால் குடித்தார்கள்.

ஆனால், நடைமுறையில் பெரிதாக மாற்றம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரு தசாப்த காலமாக 'அடிமைத் தீவில்' - திறந்தவெளிச் சிறைச்சாலை போன்று தமது வாழ் விடத்தில் - அடைக்கப்பட்டிருந்த தீவக மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏதும் இல்லை; படையின ரின் கெடுபிடி குறையவில்லை; அவல வாழ்வே தொடர்கின்றது.

தமது அன்றாட வாழ்வியல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் கடற்படையினரின் நட வடிக்கைகளைத் தடுத்து நிறுத்தித் தமக்குச் சுபீட்சம் நிறைந்த - நிம்மதியான - வாழ்வைப் பெற்றுத்தர வழிசெய்யும்படி யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத் தலை வரிடம் முறையிட்டிருக்கின்றார்கள் தீவக மக்கள்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டுப் புரிந்துணர்வு ஒப்பந் தம் கைச்சாத்தான பின்னரும்கூட தீவகத்தில் தமது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை கடற்படையி னர் கைவிடவில்லை. தீவகம் உயர் இராணுவ பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறிக்கொண்டு அங்கு தமது சுவீகரிப்பு நடவடிக்கைகளை அவர்கள் விரிவாக்கினர்.

இதற்கு எதிராகப் பொதுமக்களின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியதும் தமது செயற்பாட்டுப் போக்கை அவர்கள் மாற்றியிருக்கின்றார்கள். தங்களது சோதனைச் சாவடிகளை அகற்றியும் படைமுகாம் விஸ்தரிப்புக்களைத் தவிர்த்தும் ஒருபுறம் நல்ல முகத்தைக் காட்டிக்கொண்டு மறுபுறம் தங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பிய மக்களின் மீது தங்கள் சீற்றத்தைத் திருப்பியிருக் கிறார்கள்; பொதுமக்களை அச்சுறுத்தி வருகின் றார்கள்; மாணவர்களின் கல்வி, பொதுமக்களின் விவசாயம் போன்ற துறைகளைச் சீரழிக்கும் சீர்கேட்டின்பால் தங்கள் திறமையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றார்கள் என்று தீவக மக்கள் நலன்காப்பகம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

- இவ்வாறு மக்களின் அறிவியல், வாழ்வியல் துறைகளில் இடர்பாடுகளை வேண்டுமென்றே புகுத் தும் அடாவடித்தனம் கடற்படையினரின் திட்ட மிட்ட சதிச்செயல் என்றே தாங்கள் கருதுவதா கத் தீவக மக்கள் நலன்காப்பகம் கூறுகின்றது.

கடற்படையினரின் இந்தப் போக்குக் களையப் படாவிட்டால் தீவகமக்கள் பெரும் வெகுஜனப் போராட்டத்தில் குதிப்பர் என்றும் அவர்கள் அர சுக்கு முன்னெச்சரிக்கை மற்றும் முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார்கள்.

'நாடாளுமன்றத்தில் தீவக நிலை குறித்து உரையாற்றிய ஈ.பி.டி.பியின் எம்.பியான என்.மத னராஜா, "அன்று நாம் தீவகத்தில் நிலைகொண்டு அதனை சுபீட்சபூமியாக்கினோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளமுள்ளதாக்கி உள் ளோம். நாங்கள் இல்லை என்றால் இன்று தீவ கம் இராணுவமையமாகவே மாறி-இருக்கும்" - என்று கூறியிருக்கின்றார்.

'தீவகம் - உயர் இராணுவப் பிரதேசம்' என்று கடற்படையின் வடபகுதித் தளபதி அறிவிக்கும் அளவுக்கு இராணுவத்தின் உதவியோடு கடற் படை தீவகத்துக்குள் தமது நிலையை விஸ் தரித்து வியாபிக்க, அதற்கு உதவியாக இருந்து கொண்டு -

தமது அரசியல் அபிலாஷைகளைக்கூட வெளிப் படுத்தும் சுதந்திரம் அற்றவர்களாகத் தீவக மக் களை அடக்கி அதை ஓர் அடிமைத் தீவாக மாற் றியமைத்த 'பெருமை'யைச் சுமந்து கொண்டு -

தீவகத்தை வளமாக்கியதாகக் கூறுவது விநோதமானது.

எது எப்படியோ, தீவக மக்களைத் தொடர்ந் தும் - மேலும் - அடிமைப்படுத்தவும் அடக்கு முறைக்கு உட்படுத்தவும் திட்டமிட்டால் அது பெரும் மக்கள் போராட்டத்துக்கு வழிவகுத்து விடும் என்பதற்கு இப்போதைய முஸ்தீபுகள் கட்டியம் கூறுகின்றன என்பது மட்டும் உண்மை.

அத்தகைய நிலை ஏற்படாமல் தவிர்க்கும் நடவடிக்கைகளை எடுப்பது அரசின் பொறுப்பு.

# சித்திரவதை செய்யப்பட்ட குருக்களுக்கு ரூ.40 ஆயிரம் நஷ்டஈடு வழங்க உத்தரவு!

கொழும்பு,ஜூலை12

கொடுமையான சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட இந்துக் குருக்கள் ஒருவருக்கு அரசு நாற்பதாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வந்தாறுமூலையைச் சேர்ந்த சிவஸ்ரீ சிவசிதம்பர தேசிகக் குருக்கள் (வயது 31) என்பவருக்கே அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமென உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னா ண்டோ, அமிர் இஸ்மாயில், ஜே.ஏ.என்.டி.சில்வா ஆகியோர டங்கிய நீதிமன்று உத்தரவு வழங்கியுள்ளது.

1999ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி குருக்கள் மூதூர் பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டார். அங்கு வைத்து அவர் கைதுசெய்யப்பட்டார்.

மூதூர் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்ட சிவஸ்ரீ சிவசிதம்பர தேசிகக் குருக்கள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட் டுள்ளார்.

பின்னர்-1999ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி திரு கோணமலை பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டார்.

திருகோணமலைப் பொலீஸ் நிலையத்தில் வைத்துக் குருக்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கியை வாயில் திணித்து தாக்கப்பட்டார். இதனால் இவரது பற்கள் சேதமடைந்தன.

அடுத்தநாள் கண்டி பொலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டு அங்கும் மோசமாக சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். கண்டி பொலீஸ் நிலையத்தில் குருக்களது வாயில் பெற்றோல் ஊற் றப்பட்டு காயங்களுக்குள் மிளகாய்த்தூளைத் திணித்துச் சித் திரவதைக்குட்படுத்தப்பட்டார்.

சிங்கள மொழியில் எழுதப்பட்ட காகிதமொன்றில் கையொப்ப மிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்.

மறுநாள் 29ஆம் திகதி கண்டி நீதிவான் முன் ஆஜர்படுத்தப் பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் - என்றும் கூறப்படுகிறது.

இவர் தனது கைதும், தடுப்புக் காவலும் அரசமைப்பின் 11ஆவது சரத்தின் கீழ் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்து உயர் நீதி மன்றத்தில் மனுவொன் றைத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மனுதாரர் கொடுமை யாகச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டது நிரூபிக்கப்பட்டுள்ள தால் மனுதாரருக்கு அரசு நஷ்டஈடாக 40ஆயிரம் ரூபா வழங்க வேண்டுமென உத்தரவிட்டது.

குருக்கள் தற்போது களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மூதூர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, திருகோண மலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கண்டி நாசகாரத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர், பொலீஸ்மா அதிபர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி வி.யோகேஸ்வரன் ஆஜ ரானார்.

மீள் விசாரணைகள் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி இடம் பெறும். (எ)

## பிற்பகலில் வெறிச்சோடிவிடும் தென்மராட்சி அலுவலகங்கள்

போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சி மற் றும் வலிகாமம் பகுதிகளில் இயங்கிய தென்மராட்சி பிரதேச அரச அலுவலகங்கள் தற்போது மீண்டும் தென்மராட்சிப் பகுதி யில் மீள இயங்கத் தொடங்கியுள்ளன.

இந்த அலுவலகங்களில் பெரும்பாலானவை அலுவலக நாள்களில் பிற்பகல் 2 மணியுடன் அலுவலர்கள் இன்றி வெறிச் சோடிவிடுவதாகவும் -

இதனால் வேறு இடங்களில் குடியமர்ந்துள்ள தென்மராட்சி மக்கள், இந்த அலுவலகங்களுக்கு சற்றுத் தாமதித்து செல்ல நேர்ந்தால் ஏமாற்றத்துடன் திரும்ப நேரிடுவதாகவும் -

பொதுமக்கள் தரப்பில் குறை கூறப்படுகிறது.

அதிலும் சில அலுவலகங்களில் பிற்பகல் வேளையில் உயர் அதிகாரிகளை பார்க்க முடிவதில்லை என்று கூறப்படுகிறது.

அரசு அலுவலகங்களின் பெரும்பாலானவற்றில் பிற்பகல் 5 மணிவரை பணி நேரம் என்ற போதிலும், தென்மராட்சி அரசு அலுவலகங்கள் பலவற்றில் பிற்பகல் 2மணிக்குப் பின்னர் உயர்அதிகாரிகள் இருப்பதில்லை என்று பொதுமக்கள் தெரி விக்கின்றனர். (ஒ-117)

## வறிய குடும்பங்களுக்காக 1,500 வீடுகள் கட்ட திட்டம்

யாழ்.மாவட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தி னால் 1,500 வீடுகள் அமைப்பதற்கு வேண்டிய முன்முயற்சி நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள் பிரிவு மட்டத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் வீடுகள் சேதம் அடைந்த வர்களுக்கே இந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்தில் அண்மையில் வன்னி மாவட்டத் தில் இருந்து திரும்பியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட சொந் தக் காணி, உறுதி உடையவர்களுக்கே வீடுகள் வழங்கப்படும்.

இத்தகைய தகுதியுடையவர்களை தெரிவு செய்வதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகள் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கிராம அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுவருவ தாகக் கூறப்படுகிறது. (ஒ-86)

## காணாமற்போனோர் தொடர்பான அறிக்கை

### மாத இறுதியில் சமர்ப்பிப்பு

குடாநாட்டில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் குறித்த விசாரணை அறிக்கை இம்மாத இறுதியில் யாழ்.நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளனர். இதற்காக இம்மாத இறுதியில் புலனாய் வுப் பிரிவு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகிறது. கடந்த ஆண்டு யாழ்ப் பாணத்தில் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையி லேயே இந்த அறிக்கை தயா ரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படு கிறது. (ஒ-4)

**நாளை**

ஆனி 29
சனிக்கிழமை
(13.07.2002)
திதி : திருதியை
முற்பகல் 11.12 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
காலை 7.14 வரை.
மகம்: வைகறை 6.14
சதுர்த்தி விரதம்
மணிவாசகர் குருபூசை நாள்
சுபநேரம் : 2.59 - 4.29
ராகுகாலம்: 8.59 - 10.29
(பழைய ரேப்படி)

**உதயவாக்கு**

தியாகிகளை மதிக்காத சமூகம் மேன்மையுறாது.

## ஆளணிப் பற்றாக்குறையால் பஸ்சேவைகள் சீர்குலைவு

போதிய ஆளணிகள் இன்மையால் வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பஸ் சேவைகள் கடந்த சில தினங்களாக சீர்குலைந்துள்ளன.

இச்சபையில் கடமையாற்றிய சாரதிகள், நடத்துநர்கள் உட்பட 57 ஊழியர்கள் பணி ஓய்வு பெற்றுச் சென்றிருந்தனர்.

அந்த 57 பேரும் போதிய ஆளணி இன்மை காரணமாக மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்த்துக்கொள் ளப்பட்டனர்.

போதிய ஆளணிகளை புதிதாகச் சேர்த்துக்கொள்ளாத நிலையில் மேலிடத்தின் உத்தரவின் பேரில் ஒப்பந்த அடிப் படையில் கடமையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 57 பேரும் அண்மையில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பஸ் சேவைகளை நடத்துவதற்கு போதிய சாரதிகள், நடத்துநர்கள் இன்மையால் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டுவரும் பஸ் சேவை கள் பலவும் சீர்குலைந்துள்ளன.

இதனால் பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களையும், தாமதங்களையும் எதிர்நோக்கியுள்ள னர். (ஒ-173)

## பாடநூல்களை ஒழுங்காக பராமரித்தால் கௌரவிப்பு

தமக்கு வழங்கப்படும் இலவச பாடநூல்களை ஒழுங்காகப் பராமரிக்கும் மாணவர்களை அடுத்த ஆண்டு முதல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கவிருக்கின்றார்.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒரு மாணவர் தெரிவு செய்யப்பட்டு இச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. ஒரு வகுப்பில் பல பிரிவுகள் இருப்பின் அத்தனை பிரிவுகளிலிருந்தும் தலா ஒரு மாணவர் தெரிவு செய்யப்படுவார்.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் எம்.ஜயசேகர இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் மாணவர்களிட மிருந்து பாவித்த நூல்களில் சுமார் எழுபது வீதமான நூல்களே மீள் பாவனைக்குப் பெறக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், இலங்கை மாணவர்களிடமிருந்து சுமார் முப்பது வீதமான நூல்களையே இப்பொழுது மீள்பாவனைக்குப் பெறக்கூடி யதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## இந்தியர்களுக்கு திருமலையில் ஏற்றுமதி ஒழுங்கமைப்பு மையம்

திருகோணமலை சீனக்குடாவில் இன்னும் ஆறுமாத காலத் தினுள் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் இந்திய முதலீட்டாளர்கள் மட்டும் பயன்படுத்துவதற்கு ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயம் ஒன்று ஏற்படுத்தப்பட இருக்கிறது.

இந்திய வர்த்தக அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு வந்து கடந்த 5ஆம், 6ஆம் திகதிகளில் இலங்கை வர்த்தக அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது மேற்படி பிரத்தியேக வலயத்தை அமைப்பது பற்றி முடிவு செய்யப்பட்டது.

இதற்கான நிலத்தை இலங்கை அரசு 35 வருடக் குத்தகைக்கு வழங்கும். வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொடுக்கும். பாதுகாப்பும் வழங்கும்.

தமிழீழத் தலைநகர் என்று தமிழ் மக்களால் உரிமை கொண் டாடப்படும் திருகோணமலையில் நூறு பெரிய தாங்கிகள் கொண்ட எண்ணெய்க் குதத்தை இலங்கை அரசு, இந்திய அர சுக் கம்பனிக்கு நூறு வருடக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறது.

இதை அடுத்து இந்த ஏற்றுமதி ஒழுங்கமைப்பு வலயம் ஏற்படுத்தப்படுகிறது. அரசின் இந்த நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தி வருகின்றன.

## ஜனாதிபதி விருதுக்கான கைப்பணிக் கண்காட்சி

### அடுத்தமாதம் கொழும்பில்

தேசிய அருங்கலைகள் பேரவை நாடளாவிய ரீதியில் நடத்தும் தேசிய மட்ட கைப்பணிப் பொருள்கள் கண்காட்சி எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.


இந்தக் கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் கைப்பணி யாளர்களுக்கு கண்காட்சியின் இறுதிநாளான ஒகஸ்ட் 27ஆம் திகதி ஜனாதிபதி விருது [illegible]

[illegible] கைப்பணிப் பொருள்கள் கண்காட்சி [illegible] கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர் [illegible] கண்காட்சியில் பங்குகொள்ளத் தகுதி [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2002
## மாதிரி வினாத்தாள் இல. - 2
### பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **01முதல் 03 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட உருவங்களுடன் தொடர்பற்ற சொல்லின் கீழ் கீறிடுக.**

01.  1. ஒளி 2. ஒலி 3. வெப்பம் 4. இயற்கை

02.  1. கல்வி 2. நூல் 3. உடை 4. அறிவு

03.  1. நறுமணம் 2. தேன் 3. அழகு 4. கண்

★ **04-06 வரையுள்ள வினாக்களில், குறிப்பிட்ட ஒன்றைப் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. அவை குறிக்கும் சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

04. ☆ மின்சாரத்தால் இயங்கும்.
☆ தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
☆ சிறுவர்களுக்கு இதில் பிரியம் அதிகம்.
☆ கட்புல, செவிப்புலச் சாதனங்களில் ஒன்று.
1. வானொலி 2. தொலைபேசி 3. பத்திரிகை 4. தொலைக்காட்சி (...........)

05. ☆ மனித, உயிரின வாழ்விற்கு மிக அவசியம்.
☆ பூமியின் பசுமைக்கு உதவுகின்றன.
☆ தாமாகவே உணவைத் தயாரிக்கின்றன.
☆ மழை பெய்வதற்கும் இவை துணை புரிகின்றன.
1. வானம் 2. கடல் 3. தாவரங்கள் 4. முகில்கள் (...........)


06. ☆ பூமியின் அதிக பகுதி இதனால் சூழப்பட்டுள்ளது.
☆ உயிரின வாழ்விற்கு மிக அவசியமாகும்.
☆ மூன்று நிலைகளில் இது காணப்படலாம்.
☆ மீன்கள் இது இல்லாது உயிர் வாழமுடியாது.
1. உணவு 2. நீர் 3. நிலம் 4. பால் (...........)

★ **07-10 வரையுள்ள வினாக்களில் முதலாவதாகத் தரப்பட்டுள்ள பொருளிலிருந்து ஏனைய நான்கு பொருள்களிலும் மூன்று உருவாக / உருவாக்கக் கூடியன. ஒன்று உருவாக / உருவாக்க முடியாது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| | | (1) | (2) | (3) | (4) | |
|---|---|---|---|---|---|---|
| 07. | முட்டை → | கோழி | பாம்பு | குயில் | முயல் | (........) |
| 08. | நீர் → | நீராவி | பனிக்கட்டி | புனல் | சூடுநீர் | (........) |
| 09. | மண் → | சட்டி | குடகம் | பானை | பீங்கான் | (........) |
| 10. | வித்து → | வேம்பு | பயறு | வாழை | வெண்டி | (........) |


★ **11-15 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

11. மாதவன் சிறிய பெட்டியொன்றைப் பெரிய பெட்டியொன்றினுள் இட்டான். பின்னர் அதன் தோற்றங்களை முன்னாகவும் பின்னாகவும் பக்கமாகவும் இருந்து வரைந்தான்.




முன்-பின் தோற்றம் பக்கத் தோற்றம்

மேலிருந்து பார்க்கும் போது இவ்விரு பெட்டிகளும் எவ்வாறு தோற்றமளிக்கும்?



(1) (2) (3) (4)

ஆடி →




12. எழுத்து Pஇற்கு கிட்ட ஒரு தளவாடி பிடிக்கப்பட்டது. இவ்வாறு F என்ற எழுத்தைப் பிடிக்கும்போது ஆடியில் அது எவ்வாறு தோற்றமளிக்கும்.



(1) (2) (3) (4)

13.




1 2 3

நர்மதன் தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஒரு கோலத்தில் அமையுமாறு செவ்வகங்கள் அமைத்தான். முதலாவது செவ்வகம் இரண்டு தீக்குச்சிகள் நீளமானது. இரண்டாவது செவ்வகம் மூன்று தீக்குச்சிகள் நீளமானது. மூன்றாவது செவ்வகம் 4 தீக்குச்சிகள் நீளமானது. 10 தீக்குச்சிகள் நீளமான செவ்வகத்தை அமைக்க நர்மதனுக்கு எத்தனை தீக்குச்சிகள் தேவை?
(1) 18 (2) 25 (3) 38 (4) 42

14. MEAT என்பதை | 4 | 9 | 6 | 8 | என எழுதப்பட்டால் TEAM என்பதை எழுதப்படும் விதம்?
(1) | 4 | 6 | 9 | 8 | (2) | 8 | 4 | 9 | 6 | (3) | 8 | 9 | 6 | 4 |


15. கீழ்வரும் எழுத்து ஒழுங்கமைவிற்கேற்ப வேறுபட்ட உரு




(1) (2) (3) (4)


★ **கீழ்வரும் எண்கோலங்களின் அமைவினை அவதானித்து வெற்றிடங்களில் வரவேண்டிய விடையின் கீழ் கீறிடுக.**

16.




(1) 18 (2) 20 (3) 9


17.




(1) 8 (2) 9 (3) 10 (4) 12

★ **சரியான விடை குறிக்கும் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**


18.




A B C D E F

மேலுள்ளவற்றில் ஒத்த உருவங்கள் எவை?
(1) AF (2) BD (3) CE (4) AC

19.




மேலுள்ள பென்சிலின் நீளம் யாது?
(1) 11cm (2) 12cm (3) 9cm (4) 10cm

20.  இவ்வுருவில் உள்ளதும் அதிகமாகக் காணப்படாததுமான வடிவம் எது?

(1) செவ்வகம் (2) சதுரம் (3) முக்கோணி (4) வட்டம்

★ **கீழுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் முறையே மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

21. நாம் நாயை வீடுகளில் வளர்ப்பது?
(1) நாய் நன்றியுள்ள மிருகம் என்பதால்.
(2) நாய் காட்டில் வாழமுடியாது என்பதால்.
(3) நாய் வீட்டைக் காக்கும் என்பதால்.

22. கண்ணுக்குக் கண்ணாடி அணிவது?
(1) வெப்பத்திலிருந்து கண்களைக் காப்பாற்றுவதற்கு.
(2) கண்பார்வைக் குறைவை நீக்குவதற்கு.
(3) கண்ணாடி அணிவது அழகு என்பதால்.

23. நாம் கல்வி கற்பதற்குக் காரணம்?
(1) எல்லோரும் கல்வி கற்பதால்.
(2) பாடசாலைகள் கட்டியிருப்பதால்.
(3) அறிவை வளர்ப்பதற்காக.

★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

24. விமலைவிட அனில் 30 ரூபா குறைய வைத்திருந்தான். அவர்கள் இருவரிடமும் மொத்தமாக 90 ரூபா இருந்தால் அனிலிடம் எத்தனை ரூபா இருக்கும்?
(1) 45 ரூபா (2) 30 ரூபா (3) 120 ரூபா (4) 60 ரூபா

25. ஒரு வட்டப் பாதையின் நடுவில் நின்று பார்க்கும்போது மேற்குத் திசையில் நிற்கும் ஒருவன் இடஞ்சுழியாக அரைவட்டம் சென்று நின்றான். தற்போது அவன் நிற்கும் திசை
(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

26. தற்போது கம்சனினதும் அம்சனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 40 வருடங்கள் ஆகும். 5 வருடங்களுக்கு முன் இவர்கள் இருவரதும் வயதின் கூட்டுத்தொகை என்ன?
(1) 30 (2) 15 (3) 35 (4) 25

★ **கீழ்வரும் வினாக்களில் நான்கு சொற்களின் எழுத்துக்கள் குழம்பிக் கிடக்கின்றன. ஒவ்வொன்றையும் ஒழுங்குபடுத்தினால் அவற்றில் ஒன்று வேறுபட்டுக் காணப்படும். அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

27. (1) ம,தா,ரை (2) அ,லி,ல் (3) ர,கு,ங்,கு (4) கை,லி,ம,ல் (..............)

28. (1) ள்,ம,ச,ஞ் (2) க,ம்,மு (3) ல,ம்,நீ (4) று,க,டிப் (..............)


29. (1) யி,ம,ல் (2) க,ம்,கா (3

★ **கீழுள்ள கூற்றுக்களில் எவ்வா தெரிந்து அதன் இலக்கத்தை**

30. (1) பாடசாலையில் ஒரு வ இருந்தன. எனினும் அ
(2) ஒரு பாடசாலையில் இ எனினும் தண்ணீர்த் தெ
(3) கண்பார்வை இழந்த மா பார்த்து இரசித்தனர்

31. (1) தரம் 5 புலமைப் பரிசில் நேரம் 45 நிமிடங்கள் செய்து முடித்தான்
(2) தரம் 5 புலமைப் பரிசி வினாத்தாள் IIஇற்கா எனினும் அதற்குத் தோ டத்தில் செய்து முடித்த
(3) தரம் 5 புலமைப் பரிசில் தாக வரும் மாணவனா

★ **ஒரு வீட்டில் வளர்க்கப்படுகின்ற தகவல்களைக் கீழுள்ள உரு வினாக்களுக்குரிய சரியான வி**





அங்கு வளர்க்கப்பட்ட பிரா

32. அங்கு வளர்க்கப்படும் ஆடு
(1) 20 (2) 15

33. அங்குள்ள பிராணிகளுக்கு இருக்கும்?
(1) 80 (2) 104

★ **34-38 வரையுள்ள வினாக்களி குமான இரகசியக் குறியீட்டை அதற்குரிய உரோமன் இலக்க**




34. குந்தகம் (..........................) 37
35. சங்கரன் (..........................) 38
36. சங்கமம் (..........................)

★ **அகிலனும் கோகிலனும் கிளி அருணனும் நாய் வளர்க்கின்ற பூனை வளர்க்கின்றார்கள். இ கீறிடுக.**

39. கிளியையும் பூனையையும்
(1) அகிலன் (2) கோகிலன் (3)
40. நாயையும், பூனையையும்
(1) அகிலன் (2) கோகிலன் (3)

### பகுதி

★ **கீழ்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடைகளை**

தங்கத் தட்டுப் போ
தங்கை முகத்தை
வானில் நிலவு மித
முகில்கள் அதனை
குளத்தில் அல்லி பூ
கடலில் அலை
அழகில் உலகு மி
மனம் அதனைக்

1. பாடலில் நிலவு எவற்றுக்கு

2. முகில்கள் எதனைத் தழுவுகி

3. கடலில் சிரிப்பது எது?

★ **ஒத்த கருத்துள்ள சொல் எழு**
4. முகம் - ..............................
5. குளம் - ..............................

★ **எதிர்க்கருத்துள்ள சொல் எழு**
8. (1) சிரிப்பு - ..............................
9. பாடலில் உள்ள உயர்திணை

★ **ஆங்கிலச் சொற்களில் எழுதுக**
10. வானம் - ..............................
12. முகில்கள் - ..............................

★ **செந்தாளன் கடைக்குச் சென் பொருள்களை வாங்கினான் தரப்பட்டுள்ளது.**
சீனி - 5 கிலோகிராம்
சவர்க்காரம் - $\frac{1}{2}$ டசின்
தேங்காயெண்ணெய் - 2லீற்ற
உப்பு - 1பைக்கற்

14. செந்தாளன் வாங்கிய பாலின்

15. கடையில் வாங்கிய துணி எழுதுக.

(3) ரு,து,ப,ந் (4) ர,க,டி
(...............)


**வாறேனும் நடக்கமுடியாத கூற்றைத்**
**தை அடைப்புக்குள் எழுதுக.**

வகுப்பறையில் 40 கதிரைகள்
அங்கு 41 மாணவர்கள் படித்தனர்.
இரண்டு கிணறுகள் இருந்தன.
தொட்டியில் நீர் இருக்கவில்லை.
மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளைப்
(...............)

சில் பரீட்சை வினாத்தாள் Iஇற்கான
எனினும் சுரபிகன் 35 நிமிடத்தில்

சில் அரச இறுதிப் பரீட்சையில்
நேரம் 1மணி 15 நிமிடங்கள்
தோற்றிய சுருதிகன் 1 மணி 25 நிமி
த்தான்.
ல் பரீட்சையில், வகுப்பில் முதலாவ
ான தூயவன் சித்தியடையவில்லை
(...............)


**ன்ற இரண்டு வகையான பிராணிகளின்**
**ருவப் படத்தில் காணலாம். அதன்படி**
**விடையின் கீழ்க் கோடிடுக.**




ராணிகளின் எண்ணிக்கை 40 எனில்
ஆடுகள் எத்தனை?
(3) 65 (4) 12
கு மொத்தமாக எத்தனை கால்கள்

(3) 160 (4) 100

**ளில் தரப்பட்ட சொல் ஒவ்வொன்றுக்**
**டை நிரலில் இருந்து தெரிவுசெய்து**
**கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**




37. வசந்தன் (.............................)
38. பங்கயம் (.............................)

**ளி வளர்க்கின்றார்கள். அமலனும்**
**ன்றார்கள். கோகிலனும் அருணனும்**
**இதன்படி சரியான விடையின் கீழ்க்**

ம் வளர்ப்பவன் யார்?
(3) அமலன் (4) அருணன்
வளர்ப்பவன் யார்?
(3) அமலன் (4) அருணன்

## தி - 2
**நேரம்:- 1மணி 15 நிமிடம்**

**து அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள**
**ரி புள்ளிக்கோட்டில் எழுதுக.**

போலவும்
தைப் போலவும்
மிதக்குது
நனைத் தழுவுது
பூக்குது
லகள் சிரிக்குது
மிதக்குது
க் கண்டு மகிழுது.
து உவமித்துக் கூறப்படுகின்றன?

புகின்றன?

**எழுதுக.**
. 6. கடல் - ..............................
. 7. அலைகள் - ..............................

**எழுதுக.**
.... (II) மகிழ்ச்சி - ..............................
ணச் சொல் எது? ..............................

**துக.**
..... 11. குளம் - ..............................
..... 13. முகம் - ..............................

**சன்று வீட்டுக்குத் தேவையான சில**
**ான். அவற்றின் விவரம் கீழே**




எலுமிச்சம்பழம் - 6
பருப்பு - 500 கிராம்
மீற்றர் பால் - 1போத்தல்
துணி - $3\frac{1}{2}$ மீற்றர்
ின் அளவை மில்லிலீற்றரில் தருக.
.............................. மில்லிலீற்றர்
ணியின் அளவை சென்ரிமீற்றரில்
.............................. சென்ரிமீற்றர்

16. 1 கிலோகிராம் சீனியின் விலை 47ரூபா எனின் செந்தாளன் வாங்கிய சீனியின் மொத்தவிலை யாது?
................. ரூபா ..............சதம்
17. 1 கிலோகிராம் பருப்பின் விலை 65 ரூபா எனின் செந்தாளன் வாங்கிய பருப்பின் பெறுமதி எவ்வளவு?
................. ரூபா ..............சதம்
18. ஒரு பைக்கற் உப்பின் நிறை 375கிராம் ஆகும். அவ்வாறான 12 பைக்கற் உப்பின் மொத்தநிறை யாது?
.................கிலோகிராம் .................கிராம்
19. 1 மீற்றர் துணி 95 ரூபா வீதமும், 1 டசின் சவர்க்காரம் 144 ரூபா வீதமும் கடையில் விற்பனை செய்யப்பட்டது. எனின் இவ்விரண்டு பொருளையும் மேலே உள்ள தேவையான அளவில் வாங்க செந்தாளன் 500 ரூபாவைக் கொடுத்திருந்தால் அவனுக்குக் கிடைத்திருக்கும் மீதிப்பணம் எவ்வளவு?
................. ரூபா ..............சதம்
20. செந்தாளன் வாங்கிய சீனியினை 250 கிராம் நிறையுள்ள சரைகளாகக் கட்டினால் எத்தனை சரைகளைக் கட்டலாம்?
..............................
21. செந்தாளன் வாங்கிய ஒவ்வொரு எலுமிச்சம்பழத்திலும் 15ml வீதம் புளித்திரவம் இருந்தது. அவன் வாங்கிய எலுமிச்சம்பழம் எல்லாவற்றிலும் உள்ள புளித்திரவத்தினைச் சேர்த்தபின் அதனை மேசைக்கரண்டியினால் எத்தனை தடவை அளக்கலாம்? ..............................

★ **கீழ்வரும் வினாக்களிலே "அ" பகுதிக்குப் பொருத்தமான சொல்லை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

| அ | | ஆ |
|---|---|---|
| 22. நாடு | ( ) | 1. பிரதேச செயலர் |
| 23. கிராமம் | ( ) | 2. துணைவேந்தர் |
| 24. மாகாணம் | ( ) | 3. அரசாங்க அதிபர் |
| 25. பிரதேசம் | ( ) | 4. ஜனாதிபதி |
| 26. மாவட்டம் | ( ) | 5. கிராமசேவகர் |
| 27. பல்கலைக்கழகம் | ( ) | 6. ஆளுநர் |

★ **பின்வரும் இசைக்கருவிகள் தரம் 5 மாணவர்கள் தங்கள் அழகியல் செயற்பாடுகளில் அறிந்து கொண்டவை ஆகும். அந்த இசைக் கருவிகளின் பெயர்களை எழுதவும்.**

28. A

..............................
29. B

..............................
30. C

..............................
31. D


..............................

32. இசைக்கருவி Bஇல் உயர்ந்த தொனி எழுப்புவதற்கு கம்பிகள் இறுக்கமாகவா, தளர்வாகவா இருக்கவேண்டும்?
33. இந்த இசைக்கருவியால் இசைக்கக்கூடிய எழு சுரங்களையும் எழுதுக. ..............................
34. இந்து ஆலயங்களில் மேல் உள்ளவற்றில் எக்கருவி அதிகம் பயன்படுத்தப்படுகிறது.


★ **கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் முதலாவது நிரலில் குறிப்பிடப்படும் விளையாட்டு எவ்வகைக்குரியது என்பதைப் பொருத்தமான நிரலில் (✓) அடையாளத்தை இட்டுக்காட்டுக. உதாரணத்துக்கு ஒன்று பூரணப்படுத்தப்பட்டுள்ளது.**

| விளையாட்டு | குறுந்தூர ஓட்டம் | நெடுந்தூர ஓட்டம் | பாய்தல் நிகழ்ச்சி | எறிதல் நிகழ்ச்சி | குழு நிகழ்ச்சி |
|---|---|---|---|---|---|
| வலைப் பந்தாட்டம் | | | | | ✓ |
| 35. உயரம் | | | | | |
| 36. ஈட்டி | | | | | |
| 37. 100 மீற்றர் | | | | | |
| 38. 1500 மீற்றர் | | | | | |
| 39. நீளம் | | | | | |
| 40. கயிறிழுத்தல் | | | | | |
| 41. 200 மீற்றர் | | | | | |


★ **கீழ்வரும் பரிசோதனை அமைப்புகளின் பெயர்களை எழுதுக.**

42.



..............................

43.


..............................

44.


..............................

45.


..............................


★ **கீழ்வருவனவற்றின் தனிச்சொல்லை எழுதுக.**
46. கைகொட்டி ஆடும் கிராமிய நடனம் ..............................
47. இயல்பாக இருக்கவேண்டிய சூட்டைவிட உடம்பில் சூடு அதிகமாக இருக்கும் நிலை ..............................
48. வெள்ளி என்றழைக்கப்படும் கிரகத்தின் மறுபெயர் ..............................
49. மீன், ஓணான் போன்றவற்றின் உடலின்மீது செறிவாக மூடியிருக்கும் விறைப்புடன் கூடிய தோல் அடுக்கு ..............................

50. பனையின் முற்றிய ஓலை ..............................

★ **பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளின் கீழ்க்கோடிடுக.**
51. பல்வேறு நிறக்கடதாசிகளைக் கிழித்து ஒட்டுவதன்மூலம் செய்யும் ஆக்கம் எது?
(1) பூ ஆக்கம் (2) கொலாஜ் (3) இழைத்தல்
52. சிறுவர்கள் ஆக்கத் தொழிற்பாட்டில் விளையாட்டு இரட்டைத் தோணி செய்வதற்குப் பொருத்தமான ஊடகம் எது?
(1) பலகை (2) குருத்தோலை (3) கடதாசி
53. உருவங்கள் செய்வதற்கும், செதுக்குவதன் ஊடாக ஆக்கம் செய்வதற்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமானதும் இலகுவானதுமான ஊடகம் எது?
(1) களிமண் (2) கடதாசி (3) மெழுகு
54. பின்னுதல் இழைத்தல் தொடர்பான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்வதற்குரிய ஆக்கங்களைச் செய்வதற்குச் செலவில்லாது பெறக்கூடிய பொருள் எது?
(1) குருத்தோலை (2) நூல் (3) பாய்
55. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் கலந்துபெறப்படும் நிறம் எது?
(1) நீலம் (2) பச்சை (3) செம்மஞ்சள்

★ **வினவப்படும் வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதுக.**
56. பழமொழியைப் பூர்த்திசெய்க.
வல்லவனுக்குப் ..............................
57. கல் வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார் என்னும் விடுகதைக்கு விடை எழுதுக.
..............................
58. தம்பி பழைய புத்தகத்தைக் கிழிக்கின்றான். இவ்வாக்கியத்தில் காலத்தை உணர்த்தும் சொல் எது? ..............................
59. பலாவுக்குச் சுளை போல மாம்பழத்திற்கு ..............................
60. மாணவன் புகைவண்டியில் பிரயாணஞ் செய்தான்.
மாணவன் பாடசாலையை அடைந்தான்.
இவற்றைத் தொடர்வாக்கியமாக எழுதுக.
..............................
..............................

★ **கீழே தரப்பட்ட திண்ம உருவினைப் பயன்படுத்தி விடை எழுதுக.**



61. இத்திண்ம உருவின் பெயர் யாது?
..............................
62. இதற்கு எத்தனை வளைந்த மேற்பரப்புகள் உள்ளன? ..............................
63. இதற்கு எத்தனை முகங்கள் (தட்டையான மேற்பரப்பு) உள்ளன? ..............................
64. இதற்கு எத்தனை வளைந்த விளிம்புகள் உள்ளன?
..............................
65. இத்திண்ம உருவின் வளைந்த மேற்பரப்பின் சுற்றளவு 25 cm எனின் 5m தூரத்தைத் தொடுவதற்கு இது எத்தனை முறை சுழலவேண்டும்? ..............................
66. இதன் முகம் ஒன்றிலே 45எனும் எண் எழுதப்பட்டிருந்தது. அதனை உரோமன் எண்ணில் எழுதுக? ..............................
67. மரத்தாலான இத்திண்மத்தின் நிறை 185கிராம் எனில் இது போன்ற சம நிறையுடைய 6 குற்றிகளின் நிறை யாது?
..............................

★ **ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**
68. DOOR - .............................. 69. FLOWERS - ..............................
70. VILLAGE - .............................. 71. BOOKS - ..............................

★ **சரியான விடையை எழுதுக.**
72. உலகில் மிக நீளமான நதி எது?
..............................
73. இலங்கையின் தேசிய மரம் எது?
..............................
74. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற்பூங்கா எது?
..............................

★ **எனது வீட்டுத்தோட்டத்திற்குள் பசு ஒன்று வந்து .......... என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.**

75. ..............................
..............................
76. ..............................
..............................
77. ..............................
..............................
78. ..............................
..............................
79. ..............................
..............................
80. ..............................
..............................

**தயாரிப்பு:**
**திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)**

# அதிகாரிகள் மனு விசாரணைக்கு ஏற்பு

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருக்கும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் 5 அதிகாரிகள் தாங்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்துள்ள உரிமைமீறல் தொடர்பான மனுவை விசாரணைக்கு உயர் நீதிமன்றம் ஏற்றுள்ளது.

ஆயுதம் ஏந்தி மக்களுக்கு பல இன்னல்களைக் கொடுத்தார்கள் என இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

ஆனால், தாங்கள் கைதுசெய்யப்பட்டமை தமது மனிதஉரிமைகளை மீறும் செயல் என்று சுட்டிக்காட்டி அவர்கள் பொலீஸாருக்கு எதிராக உரிமைமீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு நீதிமன்றம் இணங்கியுள்ளது.

(ஒ-4-12)

## 148 இலங்கையர் நாடு கடத்தல்

கொழும்பு,ஜூலை12

சட்டவிரோதமான முறையில் இத்தாலி நோக்கி கப்பலில் சென்றுகொண்டிருந்தவேளை செங்கடலில் வைத்து சவூதி அரேபிய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 148 இலங்கையர்களையும் திருப்பி அனுப்புவதற்கு சவூதி அரேபிய அரசு தீர்மானித்துள்ளது.

கப்பலில் எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்கள் என்பன தீர்ந்துவிட்ட நிலையில் செங்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இவர்களை சவூதி அரேபியக் கடற்படையினர் கைதுசெய்தனர். (ஒ-4-12)

## உபகரணம் அன்பளிப்பு

வலி.கிழக்கு,ஜூலை12

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்கு கொழும்பு மத்தி லயன்ஸ் கழகத்தினால் ரூபா10 ஆயிரம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச்செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அடங்கிய குழு இந்தப் புத்தங்கள், எழுதுகருவிகளை வழங்கியிருந்தது.

(எ-180)

# வெலிக்கடைச் சிறையில் ஹெரோயின்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'ஹெரோயின்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சிறைக்காவலர்கள் இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை வளவுக்குள் ஹெரோயினை எடுத்துச் செல்லவதற்கு உதவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலீஸார் முடுக்கி விட்டுள்ளனர். (ஒ-4-12)


## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

**நாளை (2002.07.13) சனிக்கிழமை சுன்னாகம் மின்நிலையத்தில் திருத்தவேலைகள் நடைபெற இருப்பதால் அன்றைய தினம் யாழ் .குடாநாடு பூராகவும் காலை 09.00 மணிதொடக்கம் மாலை 05.00 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.**

**இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன்.**

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை. (C/22898)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 19 - 12 - 1933

மறைவு 12 - 06 - 2002

## அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி

*(ஓய்வுபெற்ற மாநகரசபை களஞ்சியப் பொறுப்பாளர், முன்னாள் தலைவர், ப.நோ.கூ.சங்கம் - கைதடி)*

மறவன்புலோ மேற்கினைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான எமது குடும்பத்தலைவர் இறைபதம் எய்திய செய்திகேட்டுப் பல வழிகளிலும் உதவிகள் செய்து ஆறுதல் கூறியும் தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தும் இறுதியாத்திரையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது இறுதி மூச்சுவரை சிரமத்தைப்பாராது வைத்திய உதவி புரிந்த Dr.திரு.K.லோகநாதன் (திருநெல்வேலி) அவர்களுக்கும், இவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது கொழும்பு கொண்டுசென்று அங்கு உதவிபுரிந்த Dr.திருமதி தில்லைநாயகி மகேந்திரன் (நாவற்குழி) அவர்களுக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொள்வதுடன், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
*மறவன்புலோ மேற்கு,*
*சாவகச்சேரி.*
*தற்காலிக முகவரி:*
*கலைவாணி லேன்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (9853)

பிரிவால் துயருறும்:
**மனைவி,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# ஓராண்டு நினைவஞ்சலியும் மனதிலிருந்து மாறாத சோகங்களும்



மலர்வு 17 - 09 - 1980

உதிர்வு 23 - 06 - 2001

## அமரர் நவரத்தினம் நவரஞ்சன் (ரமணன்)

திதி: 12.07.2002

ஆண்டொன்று சென்றபோதிலும் ரமணன் நீர் போனதெங்கே?
ஓராண்டு கழிந்தாலும் ரமணா ஆறவில்லை எம் சோகம்!
பாசத்தின் சுமையோடு எமைவிட்டுப் பறந்துசென்ற ரமணா
மாறவில்லை எம் வேதனை; ரமணா! விழியெல்லாம் நீர்தேங்கி நிற்குதையா!
விழிதேடும் இடமெல்லாம் ரமணா! உங்கள் விம்பம் தானே தெரிகிறது!
உங்கள் பூமுகம் காண ஏங்குகிறோம் ரமணா!
அன்பு முகம் காணாமல் இங்கே வாடுகின்றோம் ரமணா!
ஆறாது எம் துயரம் உயிர் உள்ள காலம்வரை ரமணா!
காலமெல்லாம் கண்ணீருடன் ரமணா! காத்திருப்போம் உங்கள் அழியா நினைவுகளுடன்.

*எம் உயிரோடு கலந்துவிட்ட எம் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரமனை கன்னிமா கௌரி அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:-
அப்பா, அம்மா, மனைவி, மகன்,
அத்தான்மார், சகோதரர்கள்,
பேத்திமார், மாமாமார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

*'வீரமனை',*
*குப்பிளான் தெற்கு,*
(5806)


# யாழ்ப்பாணம் - மாநகரசபை
# யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதும் நல்லூர், குருநகர், யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் அமைந்துள்ளதுமான கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 31.07.2002ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 12.30மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமும், மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணமும் செலுத்துவதன் பேரில் 30.07.2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.00 மணிவரையும் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையில இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல்வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 31.07.2002ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 12.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "கடை இல. ..............." கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல்வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கேள்விகள் 31.07.2002 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும். மேலதிக விவரங்களை அலுவலக நேர[illegible]களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு கேள்வியையும் கா[illegible]ம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

விவரம் வருமாறு:

| கடை இல. | அமைந்திருக்கும் இடம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்புக் கட்டணம் | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 107 | யாழ்.பெரியகடை | 500/- | 10,000/- | 1,200/- | 2,88,000/- |
| 108 | யாழ்.பெரியகடை | 500/- | 10,000/- | 1,200/- | 2,88,000/- |
| 109 | யாழ்.பெரியகடை | 500/- | 10,000/- | 1,200/- | 2,88,000/- |
| 110 | யாழ்.பெரியகடை | 500/- | 10,000/- | 1,200/- | 2,88,000/- |
| 08 | குருநகர் | 500/- | 10,000/- | 600/- | 1,44,000/- |
| 09 | குருநகர் | 500/- | 5,000/- | 300/- | 72,000/- |
| 10 | குருநகர் | 500/- | 5,000/- | 300/- | 72,000/- |
| 11 | குருநகர் | 500/- | 5,000/- | 300/- | 72,000/- |
| 24 | குருநகர் | 500/- | 5,000/- | 300/- | 72,000/- |
| 13,14 | நல்லூர் | 500/- | 10,000/- | 600/- | 1,44,000/- |

*குறிப்பு:-*

1. சித்திபெறும் கேள்விக்காரர்கள் 07 நாள்களுக்குள் கேள்வித்தொகையையும் அதற்குரிய ஜி.எஸ்.ரியையும் பூரணமாகச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்தல் வேண்டும்.
2. ஒரு விண்ணப்பப்படிவத்தில் ஒரு கடைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
3. கேள்வித்தொகையுடன் 12.5% ஜி.எஸ்.ரி. வரியையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
4. நடத்தப்படவுள்ள வியாபாரத்தின் தன்மை குறிப்பிடுதல் வேண்டும்.
5. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.
6. சித்திபெற்ற கேள்விக்காரர் உடன்படிக்கை செய்யும்போது 03 மாத வாடகை முற்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

**இ.இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10.07.2002

(C/22889)

# சபையின் கௌரவத்தைக் காப்பாற்றுவது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்டுப்பாடு

## எதர்க்கட்சியினரைக் கண்டித்து சபை முதல்வர் உரை

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபையின் கௌவரத்தையும், நிலையியல் கட்டளைகளையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இது தொடர்பாக அனைத்துக் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என சபை முதல்வர் டபிள்யூ.கே.எம். லொக்கு பண்டார நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இவ்விடயம் தொடர்பாகப் பேசிய சபைமுதல்வர் லொக்குபண்டார மேலும் கூறியதாவது:-

'கடந்த செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி.உறுப்பினர்கள் இந்தச் சபையில் நடந்துகொண்ட விதம் தொடர்பாக சகல பத்திரிகைகளும் கடுமையாக விமர்சனம் செய்து செய்திகளை வெளியிட்டுள்ளன.

சபையின் பார்வையாளர் கலரியில் பாடசாலை மாணவர்களும் நிறைந்திருந்தனர். சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை கேவலமாக அமைந்தது. இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் இது அபகீர்த்தியை ஏற்படுத்தி உள்ளது.

பிரதமர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் கடுமையான சோதனையின் பின்னரே சபைக்குள் வருகின்றோம். ஆனால், ஜே.வி.பியினர் சிவப்பு நிற பதாதைகளுடன் இங்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். விமல் வீரவன்ஸ பதாதையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு சபாபீடத்தை நோக்கிச் சென்றபோது எனது மனதில் பீதியும் அச்சமும் ஏற்பட்டன.

அப்போது - கடந்த காலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் குழு அறையில் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பே என் கண்முன்வந்தது.

எனவே இப்படியான சம்பவங்கள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது. இது தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பரி

'சபை முதல்வரின் கூற்றுக்களை ஆதரிக்கின்றேன். அதேவேளை, முன்பு எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இவர்கள் இருந்தபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் நினைவு படுத்துகின்றேன். ஜனாதிபதி இச்சபைக்கு இரண்டு முறை




சீலனை செய்து சபை யின் கௌரவம் பாதிக்கப்படாமல் ஒழுங்கு விதிகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.' - என அமைச்சர் லொக்கு பண்டார வலியுறுத்தினார்.

சபை முதல்வரும் அமைச்சருமான டபிள்யூ.கே.எம்.லொக்கு பண்டாரவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் அடுத்து நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படும் என அறிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் சபைக்குள் வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் அனுரா பண்டார நாயக்க -

வருகை தந்தார். அப்போது இவர்களும் இதே போன்று ஆர்ப்பாட்டம் செய்தனர். சட்ட வரைவுகளை சபை நடுவில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்தினர். அப்போர்து இங்கே தீவிபத்து ஏற்பட்டி ருந்தால் என்னவாகியிருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.'- எனக் குறிப்பிட்டார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சபாநாயகர், கடந்த கால கசப்பான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதே எமது நோக்கம். எனவே சபை உறுப்பினர்கள் அனைவருமே ஒழுக்கத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறினார். (ஒ)

# புலிகளின் வரி விவரங்களையும் 'ஹன்சார்ட்டில்' பதிய வேண்டும்!

## மதனராஜா எம்.பி. கோரிக்கை

'அரசு ஒரு சிறு வரியை விதிப்பதற்கு இரண்டு நாள்கள் விவாதம் நடத்துகின்றது. பல லட்சம் ரூபாவைச் செலவிடுகின்றது. ஆனால், புலிகளோ சில மணி நேரத்தில் ஒரு பத்திரிகை அறிக்கைமூலம் வரிகளைத் தீர்மானித்து விடுகின்றனர். ஒரே நாட்டில் இரண்டு போக்குகள்' என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான நடராஜா மதனராஜா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறியதோடு, புலிகள் அறவிடும் வரி விவரங்களை நாடாளுமன்றப் பதிவுப் புத்தகமான 'ஹன்சார்ட்டில்' பதியவேண்டும் எனக் கோரி ஒரு பத்திரிகை நறுக்கையும் சபையில் சமர்ப்பித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பற்று வரிகள் தொடர்பான விவாதத் தில் பேசும்போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

'தீவகத்தில் கால் ஊன்றி விட்டோம்; வெற்றி கண்டு விட்டோம்' - என்று புலிகள் வீராப்புப் பேசுகின்றனர். அன்று நாம் தீவகத்தில் நிலை கொண்டு அதனை சுபீட்ச பூமியாக்கினோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை வளமுள்ளதாக்கி உள்ளோம். நாங்கள் இல்லை என்றால் இன்று தீவகம் இராணுவ மையமாகவே மாறி இருக்கும். இதைத் தீவுப்பகுதி மக்கள் அறிவர்.

இன்று அரசு வரிகளை நீக்கி இருப்பதாகக் கூறுகின்றது. ஆனால், சுவாமிக்குப் படைக்கும் கற்பூரத்திற்குக் கூட வரிவிதித்துள்ளனர் புலிகள். சுவாமி கும்பிடவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது' - என்றார் மதனராஜா எம்.பி.

(ஒ)

# இன்னும் இரண்டு வாரங்களில் வாழ்க்கை நிலை வளமாகும்

## சொக்ஸி நாட்டு மக்களுக்கு அறிவிப்பு

இன்னும் இரண்டு வாரங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அனைத்தும் குறைக்கப்படும். இதன்மூலம் முன்னைய அரசு, பொது மக்கள் மீது சுமத்தி இருந்த சுமைகள் நீக்கப்படும். அரசின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சனம் செய்தவர்களுக்கு இது ஒரு நல்ல பாடமாக அமையும் என நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

பற்றுவரிகள் தொடர்பாக நடைபெற்ற விவாதங்களுக்குப் பதில் அளிக்கும்போதே நிதி அமைச்சர் இப்படிக் கூறினார். தொடர்ந்து பேசிய அமைச்சர் சொக்ஸி மேலும் கூறியதாவது:-

'நாம் முத்திரை வரியை முற்றாக நீக்கி உள்ளோம். இந்த முத்திரை வரியைவிட முத்திரைவரியைச் சேர்ப்பதற்கான செலவுகள் அதிகரித்துள்ளன. இது மக்களுக்குச் சுமையேயன்றி நன்மை இல்லை. இதேபோன்று சில பொருளகளுக்குத் தீர்வை வரியை குறைத்தும் சில பொருள்களுக்கு முற்றாகவே நீக்கியும் உள்ளோம்'- என்றார்.

பற்றுவரி சட்டமூலம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 66 வாக்குகளையும் பெற்று 36 மேலதிக வாக்குகளால் அது நிறைவேறியது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் எதிர்த்து வாக்களித்தன. தமிழர் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சபையில் இருக்கவில்லை. ஈ.பி.டி.பி.யின் டக்ளஸ் தேவானந்தாவும் புளொட் சித்தார்த்தனும் அரசுடன் சேர்ந்து சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். (ஒ)

# மனித உருவில் அவதரித்து துன்பம் போக்கும் அன்னை

## டென்மார்க் பிரண்டா நகரில் அற்புதம்

கடவுள் ஒருவர் இருக்கின்றாரா? அவர் எப்படி இருப்பார்? அவர் என்ன செய்கின்றார்? என்று இன்னோரன்ன பல கேள்விக் கணைகளைத் தொடுக்கின்ற மக்கள் வாழ்கின்ற இந்தக் காலகட்டத்தில் மாதாஜி ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் வாழ்க்கை நெறி மிகவும் வியக்கத்தக்கதொன்றாகும்.



அன்னையின் வயிற்றில் உருவாகி வாய்வழியே வெளிவந்த கருங்கல் சிவலிங்கம்.

ஆறு வருடங்களுக்கு முன் ஸ்ரீ அபிராமி அம்பாள், ஸ்ரீ உபாசகி அம்மாவின் உடம்பில் வந்து அமர்ந்து கொண்டு தன்னை நீ ஆதரித்து மக்களையும் காத்தருளவேண்டும் என ஆணையிட்டார். அதன்படி அம்மா தன்னுடைய வீட்டில் ஓர் அறையில் அம்பாளின் படத்தை வைத்துப் பூஜை, செய்யத் தொடங்கினார்.

அன்று முதலாக தன்னிடம் வருவோர்க்கு அருள்வாக்குச் சொல்லத் துவங்கினார் உபாசகி அம்மா.

### அருள்மயமான தோற்றம்

நெற்றியில் குங்குமப் பொட்டும் கழுத்தில் உருத்திராட்சமும் காவியுடையும் அணிந்து அருள்மயமாகக் காட்சிதரும் அம்மா, இளம் வயதில் திருமணமாகி இல்லற வாழ்விலிருந்து விலகி, துறவற வாழ்க்கையை மேற்கொண்டு மக்களைக் காப்பாற்றியருள்கின்றார். அம்மாவின் கனிவான பார்வை மக்களின் மனதை மகிழ்ச்சிக்குள்ளாக்கி கவலைகளிலிருந்து விடுபட வைக்கும் தமது அன்பான வார்த் தைகளால் மக்களின் உள்ளங்களைக் குளிரவைப்பார்.

ஆலயம் ஆரம்பித்த நாள்களில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அம்மா வின் வயிற்றிலிருந்து இரண்டு மாணிக்கக் கற்கள் வெளி வந்தன. இரத்தத்துடன சோத்து அவறறைக் கக்கி எடுத்தார். அநேக மக்கள் கூடி நின்று இந்தக் காட்சியைப் பார்த்தனர்.

அதுமுதல் அம்மா சாப பிடமுடியாமல் கஷடப்பட்டார். தன்னை வருத்திய நிலையில் இந்த அற்புதமான மாணிக்கக் கற்களை தன் வயிற்றிலிருந்து இந்த உலகுக்கு அளித்துள்ளார். இரு கற்களையும் நாக பாமபின் தலையில் பதித்து ஒவ்வொரு கிழமை யும் அபிஷேகம் செய் கின்றார் அம்மா. கோயி லுக்கு வருவோர் அந் தக் கற்களைப் பார்க்காமல் போகமாட்டார்கள். அதுமட்டுமன்றி, நாகதோஷம் உள்ளவர் கள், புத்திரபாக்கியம் இல்லாதவர்கள் விசேடமாகச் சனிக் கிழமைகளில் வந்து பால், குங்குமம், அபிஷேகம் செய்து பலன் அடைந் துள்ளார்கள்.



ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னை

### மக்கட்பேறு

இந்த ஆலய வீதியிலுள்ள மரம் ஒன்றில் குழந்தையுடன் சேர்ந்த தொடிலைக் கட்டினால் நிச்சயம் குழந்தைப்பேறு கிட்டும். அந்த நம்பிக்கையில் இன்றும் பல தம்பதியர் தமது எண்ணம் நிறைவேறவேண்டி நேர்த்தி இருப்பார்கள். அம்மாவின்மேல் எவ்வளவு நம்பிக்கையும் பக்தியும் செலுத்துகின்றோமோ அவ்வளவு சீக்கிரத்தில் பலன் கிடைத்துவிடும்.

### மணப்பேறு

திருமணம் நடைபெறாத கன்னிப் பெண்கள் அம்மாவிடம் வந்து ஆசி பெற்றால் வெகுவிரைவில் கல்யாண நடைபெற்றுவிடும். வெளிநாடுகளில் வாழும் மக்கள், இளைஞர்கள் பலர் அம்மாவிடம் வந்து ஆசீவாதம் பெற்றுக்கொள்வதால் ஏகப்பட்ட சிக்கல்களிலிருந்தும் விடுதலை பெறுகின்றனர். நேரடியாக வந்து அம்மாவிடம் ஆசிபெற முடியாதவர்கள் கடிதம், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆசீர்வாதத்தைப் பெறுகின்றார்கள்.

### அருள்மிகுந்த ஆலயம்

அம்மாவின் ஆலயம் டென்மார்க் நாட்டில் பிரண்டா என்ற இடத்திலுள்ளது. சுற்றிவர அழகான வயல்வெளியும் சோலைபோல் மரங்களும் உளளன.

இங்கே ஆடிமாதம் வளர்பிறை திருதியையில் தேர்த்திருவிழாவும் பின்னர் தீர்த்தம், பூங்காவனம், வைரவர் பூஜை என்றும் சிறப்பாக நடைபெறும் திருவிழாக்கள் மிகவும் பக்திபூர்வமானவை. பல்வேறு நாடுகளிலிருந்தும் தமிழ்மக்கள் டென்டார்க்குக்கு வந்து இத்திருவிழாக்களில் கலந்துகொள்வர். ☆

யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்தில்

# மின்சாரத் தடையாலேயே கடிகாரங்கள் செயலிழப்பு

## ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்தின் 3 முகப்புக் கடிகாரங்களும் செயழிழந்தமைக்கு மின்சாரத் தடையே காரணம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாநகராட்சி ஆணையாளர்.

மணிக் கூண்டுக்கோபுரத்துக்கான மின்சாரம் செல்லும் வயர் துண்டிக்கப்பட்டதாலேயே மின்தடை ஏற்பட்டதாகவும்- இந்தத் தடை சீர்செய்யப்பட்டதையடுத்து நேற்றுமுதல் கடிகாரங்கள் இயங்குவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், பழுதடைந்த ஒரு கடிகார இயந்திரம் திருத்தப் பணிக்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஆணையாளர் அந்தக் கடிகாரத்தின் திருத்த வேலைகள் முடிந்ததும் விரைவில் எடுத்துவரப்பட்டு மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ)

# பருத்தித்துறையில் கோழிக்கு அம்மைநோய்த் தடுப்பூசி

## அடுத்த செவ்வாய் ஏற்றப்படும்

வடமராட்சி,ஜூலை12

குடாநாட்டில் நிலவும் கடும் வெப்ப நிலை காரணமாக கோழிகளுக்கு அம்மைநோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுப்பதற்காக மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை .கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் வீடுகளில் கோழி வளர்ப்போரும், சிறுகோழிப் பண்ணைகளை வைத்திருப்போரும் தமது கோழிகளை நேரடியாக வைத்திய நிலையத்துக்கு எடுத்து வந்து அம்மை தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ளும்படியும் -

பெரும் கோழிப்பண்ணைகளை வைத்திருப்போர் வைத்திய நிலையத்தில் பதவுசெய்தால் பண்ணையில் வைத்தே கோழிகளுக்கு தடுப்பூசி போட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் -

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(ஒ-173)

# கிராம அலுவலர் இடமாற்றம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

வலி.வடக்கு,ஜூலை12

கிராம அலுவலர்களின் இடமாற்றங்கள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கும்படி உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


கிராம அலுவலர்களுக்கான பொதுவான இடமாற்ற நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வசதியாகவே அமைச்சின் பணிப்பின்பேரில் இந்த அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் பணிப்புரையையடுத்து தற்போது பிரதேச அலுவலகங்கள் ரீதியாக கிராம அலுவலர்களின் சொந்த முகவரி மற்றும் கடமையாற்ற விரும்பும் இடத்தின் விவரம் போன்றவை சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் நன்மைகருதி கிராம அலுவலர்களின் சொந்த இடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(ஓ-86)

# சென்றல் - சென்ஜோன்ஸ் அணிகளுக்கிடையே 'வடக்கின் மாபெரும் மோதல்' இன்று ஆரம்பம்

வடக்கின் மாபெரும் மோதல் (Battle of the North) என்று வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இப்போட்டி நாளை முடிவடைகின்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டம் இப்போட்டித் தொடரின் 96ஆவது ஆட்டமாகும்.

இதுவரை நடந்துமுடிந்த போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 32 போட்டிகளிலும், மத்திய கல்லூரி அணி 21 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 34 போட்டிகள் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. எட்டுப் போட்டிகள் குறித்த பதிவுகள் இல்லாத காரணத்தால் அந்த முடிவுகள் தெரியவில்லை.



யாழ்.மத்திய கல்லூரி அணியினர்

அமர்ந்திருப்போர் (இ-வ): எஸ்.காண்டீபன் (பயிற்றுநர்), வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), எஸ்.கார்த்தீபன (அணித் தலைவர்), க.இராசதுரை (அதிபர்), வி.இரஜீவ்குமார் (அணி உபதலைவர்), கே.றோகான், இ.எஸ்.ஆர்.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்).
நிற்போர் (இ-வ): ஏ.யசீந்தன், ஆர்.மதூசன், சி.ராஜீவ், கே.கார்த்திக், எஸ்.துஷாந்தன், எஸ்.திலீபன், எஸ்.பிரஷாந், எஸ்.விஜயகாந்த், எஸ்.சிவகுமார்.

இவ்வாண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டங்களில் யாழ்.மத்திய கல்லூரி 9 பாடசாலைகளுடன் விளையாடியது. இவற்றில் 4 ஆட்டங்களில் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது. 5 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 6 ஆட்டங்களில் நான்கில் வெற்றி பெற்றது. 2 ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. இதனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரு கல்லூரி அணிகளும் மிகப் பலத்துடனேயே களம் இறங்குகின்றன. இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற எதிர்வுகூறல் கடினமானதே. எப்படியிருப்பினும் யாழ். கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் விறு விறுப்பான கிரிகெட் ஆட்டம் ஒன்றினைக் காணலாம்.

நாளை முடிவடையும் வடக்கின் மாபெரும் மோதலில் இறுதியில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய வீரர்களும், ஆட்ட நாயகனும் தெரிவுசெய்யப்படுவர். இன்றும் நாளையும் காலை 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகி 5.40 மணிவரை நடைபெறவுள்ளது. (ுரி)



யாழ்.சென்.ஜோன்ஸ் அணியினர்

அமர்ந்திருப்போர் (இ-வ): ஜெ.அமலசீலன் (பிரதி அதிபர்), சி.அகிலன், பி.லவேந்திரா (அணித்தலைவர்), எஸ்.தீனபாலன் (அதிபர்), வி.விஸ்ணுவர்த்தனன் (அணி உபதலைவர்), எஸ்.இராஜாராம், கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுநர், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்).
நிற்போர் (இ-வ): எஸ்.ரஜீவன், பி.மதுராஜ, டீ.சி.அன்ட்ரூ, கே.விஷாகன், ஏ.றிஜோசன், எ.தனஞ்சயன், ஈ.ஜே.வில்சன், எஸ்.கிருஸ்ணகுமார், ஏ.அன்புஜன், சீ.டிலோஸ்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை12

ஊர்காவற்றுறை கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும், மறுநாள் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு பெருவிழா திருப்பலியும் இடம்பெறும். (எ-173)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை12

சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையில் தீர்த்தம் இடம்பெறும். (எ-28)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை12

பூநகரி செல்லையாதீவு கண்ணகையம்மன் ஆலயத்தின் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். (எ-17)

★ ★ ★

நவாலி,ஜூலை12

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கடந்த 10ஆம் திகதி முதல் தினமும மாலை 6 மணி தொடக்கம் 'கந்த புராணம்' என்னும் தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இளைப்பாறிய அதிபரும் இந்து சமய விருத்திச் சங்கத்தின் உபதலைவருமான எஸ்.செல்லத்துரை சொற்பொழிவை நிகழ்த்தி வருகின்றார். (எ-100)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு 'உத்தனை உலகம் உய்ய' என்ற தலைப்பில் கலைவாரிதி சி.சபாநாதனின் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி ஆசிரியர் சி.கேசவன் நிகழ்த்துவார். (எ-173)


# பல வருடங்களின் பின்

யாழ்மண்ணில் நிலவும் சமாதான சூழ்நிலையில் நடைபெறுகின்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களையும் யாழ்.மத்திய கல்லூரி வீரர்களையும் வாழ்த்துவதில் இலங்கையில் மின்சார சாதனங்களின் விற்பனையில் முன்னணியில் உள்ள அபான்ஸ் கம்பனி பெருமை அடைகின்றது.

*குறிப்பு:* சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு LG மின்சார சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும்.

எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்

**யாழ்ப்பாண மின்னகம் (Jaffna Electricals),**
94(6), ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**உஷா ஏஜென்சி (Usha Agency),**
145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.



LG


Abans

498, காலி றோட், கொழும்பு - 03, தொலைபேசி: 565265 - 79

(5871)

# தேன்தமிழாம் 'திருவாசகம்' அருளிய சீர்மிகு அடியார் மாணிக்கவாசகர்

**மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசைத் தினம் (ஆனிமகம்) நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**



மணிவாசகர் அருளிய தெய்வத் திருமறையின் பெருமையை

*'சொல்லாதவர்களையும் நெஞ்சுருகச் சொல்லவைக்கும்*
*நில்லாதவர்களையும் செந்நெறியில் நிற்க வைக்கும்*
*பொல்லாதவர்களையும் போக்கறுத்து வாழ வைக்கும்*
*வல்லாளன் தன் தெய்வமாய் மலர்ந்தேன் வாசகமே'*

எனப் புகழ்ந்து பாடுவர். கல்லைப் பிசைந்து கனியாக்கவல்லது, சைவ ரசம் புல்லப் பிழிந்து புதுமை செய்வது, பிறவித் துன்பம் அகன்று வீடுபேறடைய வழிகோலுவது. அத்தகைய சிறப்புமிக்க திருக்கோவையாரையும், திருவாசகத்தையும் இணைத்து 'கோவை திருவாசகம்' என்கிறார் ஔவைப் பாட்டி. சைவ சமய குரவர்களுள் ஒருவரான அன்பு வள்ளல், அன்பு பிழம்பு எனத் திகழும் ஸ்ரீ மணிவாசகர் அருளிய இந்த இரு நூல்களையும் பிரித்துக் கூறாமையே நன்றாகும்.

## ஞானக்கதிர்

இக்கோவை திருவாசகம், இன்பத்தேன், ஆதி சீரபரவும் வாதவூரண்ணல் மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேன், அறியாமை இருள் அகற்றி அறிவு ஒளியூட்டும் ஞானத்தேன், தொல்லை இரும்பிறவி சூழுந்தளை நீக்கி அல்லல் அறுத்து ஆனந்தமாக்கும் தேன், இறைவன் அன்பின் வடிவம் என்பதை உணர்த்தும் அன்புத் தேன், எத்துணையளவில் பருகினாலும் தித்திப்பாகவே இருக்கும் தேன். இத்தகைய அருள் தேனை அருளிய திருவாதவூரடிகளாது ஆரம்ப காலத்திலேயே ஞானம் தலைப்பட்டது.

நறுமலர்ப் பூங்காவிலும், காட்டிலும், புதர்களிலும், செடி கொடிகளிலும் சென்று தேனைத் தேடும் வண்டுபோல அடிகளாரும் நல்லதொரு குருவைத் தேடினார். ஆரிய நாட்டு குதிரை வணிகனிடம் பாண்டிய மன்னன் குதிரை வாங்க அனுப்பியது அவருக்கு நல்லதொரு வாய்ப்பாகியது. திருப்பெருந்துறையிலே ஞானாசிரியனைப் பார்த்து கையிலுள்ள நூல் யாது? என்று வினாவினார். ஞானாசிரியன் 'சிவஞானபோதம்' என விடையளித்தார். அடிகளார் மனம் மகிழ்ந்து சிவமெது?, ஞானமெது?, போதமெது? என்று வினாவினார். 'நிலைபெற்ற சிவம் என்பது ஒப்பற்ற தனிப் பரம்பொருள், அதனைத் தேர்தலே ஞானம், தேர்ந்த பொருளைத் தெளிதலே போதம்' என்று உண்மைநெறியை விளக்கினார். ஞானகுரு உடனேயே சிந்தனை, செயல் மாறுபட்டவராய் குதிரை வாங்கக் கொண்டுசென்ற செல்வங்கள் முழுவதையும் குருவின் நல்லாசியுடன் திருப்பெருந்துறை கோயிலின் திருப்பணிக்கும், ஏனைய அறப்பணிகளுக்கும் பயன்படுத்தினார். சிவபெருமானே குருவாக நின்று உலகத்தவர் உய்யும் பொருட்டு பாடப் பணித்தார். அதன் பேறாக நமக்குக் கிடைத்தவையே திருக்கோவையாரும் திருவாசகமும்.

திருச்சிற்றம்பலக் கோவை என்னும் திருக்கோவையார் 400 பாடல்களைக் கொண்டவை. சிவபெருமானை நாயகனாகவும், ஆன்மாவை நாயகியாகவும் கொண்டு அகப்பொருள் விளங்கப் பாடிய பாடல்களாகும். திருவாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. அவற்றில் 656 பாடல்கள் வந்துள்ளன. திருவாசகத்தை சுவாமி கோயில் எனவும், திருக்கோவையாரை அம்மன் கோயில் எனவும் கருதுவர். இவ் 1056 பாடல்களும் அடங்கிய கோவை திருவாசகமுள்ள எட்டாந் திருமுறையை திருவருளின் சொல்லாலயம் என்பர்.

சிவபுராணத்தைக் கோபுரவாயில் என்றும், கீர்த்தி திரு அகவலை மகா மண்டபம் என்றும், திருவண்டப் பகுதியை அர்த்த மண்டபம் என்றும், போற்றித் திரு அகவலை கர்ப்பக் கிருகம் என்றும், திருச்சதகம் முதலான பகுதிகள் ஆலயத்தின் அமைப்புகள் என்றும் கூறலாம். இவையெல்லாம் வழிபாட்டின் விளக்கங்களாக அமைகின்றன. பெரும்பாலும் காதலன் - காதலி, மக்கள் - பெற்றோர், பாங்கர் - பாங்கியர், ஆண்டான் - அடிமை, மாமன் - மருகன் என்று அன்புநெறி தொடர்போடு இறைவன் பாலீட்டும் ஒழுக்கநெறியைக் கூறுகின்றன. இதனாலன்றோ திருவாசகம் பல மொழிகளிலும் மொழி பெயர்த்து ஓதப்படுகிறது.

**பரா. றமேஸ்**

இவ்வாறு 'அன்பே சிவம்' என்பதை உணர்த்தும் வகையில் அன்பின் வடிவாக வாழ்ந்து, சைவ சமயத்தின் பெருமைக்கு நிறைந்த அற்புதங்களைச் செய்து, அருள்நெறி பாடல்களைத் தந்து ஆனிமா மகத்தில் இறையடி ஏகிய மணிவாசகப் பெருமானது வாழ்க்கையை, பாடல்களைப் போற்றித் துதித்துப் பேரின்பப் பெருவாழ்வு வாழ்வோமாக! ★

# சமஸ்கிருத கலாசாலை சுன்னாகத்தில் ஆரம்பம்

வலிகாமம் தெற்கு,ஜுலை12

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினரால் சமஸ்கிருத கல்விப் பயிற்சிக் கலாசாலையொன்று சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் சுன்னாகம் கதிரமலை சிவன்தேவஸ்தான மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கலாசாலையில் சனி, ஞாயிறு, திங்கள், புதன், வியாழன் ஆகிய நாள்களில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இக்கலாசாலையில் சேர்ந்து சமஸ்கிருதம் பயிலும் பிராமண சிறுவர்களின் தங்குமிட வசதி, உணவு, கல்வி வசதி போன்றவற்றை ஆவணி மாதத்தில் இருந்து ஒழுங்குபடுத்திக் கொடுக்க ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தங்குமிடவசதி தேவைப்படும் சிறுவர்கள் ஒன்றியச் செயலாளருடன் அல்லது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமஸ்கிருத கல்வி பயிலும் மாணவர்களுக்கு சோதிடம், வைதீகம் ஆகியவற்றையும் இணைத்துக் கற்பிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-152)

### சைவபரிபாலனசபை நடத்திய

# 'சித்தாந்த பண்டிதர்' பட்ட பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட பட்டப் பரீட்சைகளில் சித்தி அடைந்தோர் விவரம் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர்**

சிவவதனி சுப்பிரமணியம் (சுன்னாகம்), சசிலேகா கனகசுந்தரம் பிள்ளை (அச்சுவேலி) தி.சிவரஞ்சினி (நல்லூர்).

இவர்கள் அனைவரும் மூன்றாம் பிரிவில் சித்தியடைந்துள்ளனர்.

**சைவ சித்தாந்த பாலபண்டிதர்**

2ஆம் பிரிவில்:- ஆறுமுகம் சிவகுமார் (பண்டத்தரிப்பு), பார்மதி குமாரசாமி (கந்தரோடை), உஷா [illegible] (வல்வாய்) ஆகியோரும் 3ஆம் பிரிவில்:- சங்கீதா சதாசிவ சர்மா (நீர்வேலி), வா.சாந்தினி (சுழிபுரம்) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

**சைவ சித்தாந்த பண்டிதர்**

2ஆம் பிரிவில்:- குவேணி கந்தசாமி (யாழ்ப்பாணம்), குகதாஸ் மகாலக்சுமி (மல்லாகம்), சிவானந்தன் நந்தகுமார் (உரும்பிராய்), குமாரசாமிசர்மா சிவராஜசர்மா (திருநெல்வேலி) ஆகியோரும் -

3ஆம் பிரிவில்:- வேலாயுதர் ஜெயகுரு (சுழிபுரம்), அப்பாத்துரை கருணாகரன் (சுழிபுரம்), மனோரஞ்சினி சுப்பிரமணியம் (வட்டுக்கோட்டை) ஆகியோரும் -

இலக்கண பாடத்தில் நூதன சித்தியை சூ.செந்தில்குமரன் (கோண்டாவில்), புஸ்பரேகா சுந்தரலிங்கம் (நீர்வேலி) ஆகியோரும் சித்திபெற்றுள்ளனர்.

மேற்படி பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் [illegible]கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

### யாழ்நகரில் மீண்டும் றம்புட்டான்

அரியாலை,ஜுலை12

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்நகரில் றம்புட்டான் பழங்கள் விற்கப்படுகின்றன.

ஒரு றம்புட்டான் பழம் இரண்டு ரூபாவுக்கு விற்கப்பட்டதைக் காண முடிந்தது.

கொழும்பிலிருந்து தரைப்பாதை ஊடாக வியாபாரிகளால் இந்த றம்புட்டான் பழங்கள் பெருமளவில் எடுத்துவரப்படுகின்றன. (ஒ-17)

### வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜுலை12

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சார்லி சப்ளின் (Charlee Chaplin) இயக்கிய சிற்றி லைற் (City light) எனும் திரைப்படம் நாளை காலை 10.00 மணிக்கு, புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (ம)

### இளைஞர் பேரவை குழுவினர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,ஜுலை12

தேசிய இளைஞர் பேரவையின் 100 பேர் அடங்கிய குழு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ். வரும் இக்குழுவினர் நல்லுறவைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். (ஒ-8)

### மா விநியோகம் மட்டுப்படுத்தப்படும்


யாழ்ப்பாணம்,ஜுலை12

பிறிமா மா ஆலையின் இயந்திரங்களில் திருத்தவேலைகள் இடம்பெறுவதன் காரணமாக மா விநியோகம் கணிசமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட ப[illegible]வெசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

அடுத்த இருவாரங்களுக்கு மாவின் வருகை குறைவாக இருக்கும் என்றும் -

இதன் காரணமாக மாவிநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் - சமாசம் அறிவித்துள்ளது. (ம-3)

# பொதுநிகழ்வுகளில் சில...



இசைக்கலைமணி சி.துரைராசா எழுதிய 'பல்லவி மாலை' என்னும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் ஆசியுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். பேராசிரியர் சபா.ஜெயராசா, மகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோரும் மேடையில் காணப்படுகின்றனர். (எ-173)



ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இடையே கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தியது.

மேற்படி போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட கப்டன் ஏ.டீ.எம்.குணசிங்கம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தின் செயலாளர் எஸ்.மனோகரன், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எஸ்.தவராசசிங்கம் மற்றும் நிர்வாகிகளையும் படத்தில் காணலாம். (எ-11)



புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலை மன்றத்தின் 40 ஆவது ஆண்டு விழாவில் மன்றத் தலைவி திருமதி சூரியகுமாரி புலேந்திரன் தலைமையுரை நிகழ்த்துவதையும், பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம், திருமதி சுப்பிரமணியம், பட்டயக் கணக்காளர் ஏ.சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காண்லாம். (எ-173)



அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் உலக சூழல் தினம் அண்மையில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரீ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய யாழ்.மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு நிகழ்விற்கு வருகை தந்தபோது மலர்மாலை சூட்டி வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-51)

பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.



மூவ் பாம்

MOOV
JOINT PAIN RELIEVER

தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு

மூட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி



இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

A PARAS PRODUCT

விநியோகிப்போர்
பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559

(C/22822)



## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்
## *சிறுவர் இல்லம் வவுனியா*

மேற்படி சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளை அறிவூட்டி, நல்லொழுக்கம் உடையவர்களாக்கக்கூடிய தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்றக்கூடிய குடும்பஸ்தர் ஒருவர் அல்லது இருவரினது சேவை வேண்டப்படுகின்றது. அவர்களுக்குரிய இருப்பிட வசதிகளும் ஊதியமும் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் கடிதமூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு:-*ஓய்வுபெற்ற ஆசிரியத் தம்பதியினர் விரும்பத்தக்கது.*

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி
அருளகம்,
கோவில் குளம்,
வவுனியா.
*T.P. :- 024-21685*

அறங்காவலர்.
அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்,
*T.P. :- 024-22651*

(5509)



## சைக்கிள் என்று கேட்காதீர்கள்
## லுமாலா என்று கேட்டு வாங்குங்கள்!

இலங்கையில் 20 வருடத்திற்கும் மேலாகஅனைவரது மனதிலும் தனக்கென்று ஒரு தனி இடத்தை பெற்றுக்கொண்ட ஒரே ஒரு சைக்கிள் லுமாலா.

அனைத்து உதிரிப்பாகங்களையும் எவ்வேளையிலும் இலங்கையின் எப்பாகத்திலும் தங்குதடையின்றி அனைவரும் பெற்றுக் கொள்ளலாம்.

பத்து வருடகால உறுதியான உத்திரவாதம் அளிக்கப்படும்.

ஜப்பானிய தொழில் நுட்பத்துடனான ஒரே ஒரு சைக்கிள்





10 YEARS WARRANTY Japanese Technology

THE LUMALA CYCLE

**Lumala**
Bicycles supreme

(C/22892)

மேலதிக விபரங்களுக்கு
**CITY CYCLE INDUSTRIES**
117 & 119 Dam Street, Colombo - 12
Tel : 432745, 433845 Fax : 449478



## க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு
குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



[illegible]

முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு
21" [illegible]

இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்
21" [illegible] VCD [illegible]

விற்பனையாளர்களுக்கும் பரிசு
[illegible]

ஆறுதல் பரிசுகள்
100 [illegible] 100 [illegible]

முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு
[illegible] 650 [illegible]

[illegible] 19ம் திகதி 2002 [illegible]

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு

Masters DDB LH: C.38/2002 (C/22508)

# தமிழ்த்தினப் போட்டி

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று காலை 9 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

கணித, விஞ்ஞான,பொது அறிவுப்போட்டிகள் நாளையும் -

சமூகக்கல்விப் போட்டிகள் நாளை மறுதினமும் - காலை 9 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலேயே இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கல்லூரித் தினவிழா

யா/புனித ஹென்றியரசர் கல்லூரித் தினவிழா

ஜுலை மாதம் 13ஆம் திகதி சிறப்பாக நடைபெறும்.

### நிகழ்ச்சிநிரல்

காலை 8.30 புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியை புதிய குருக்களான அருட்தந்தை மகான், அருட்தந்தை பாஸ்கரன் ஒப்புக்கொடுப்பார்கள்.

10.00 Henrican U.K. Building ஹென்றிசியன் U.K. தலைவர் திரு. எமில் மகேன் (FCA, FCMA, MBA) அவர்களினால் திறந்துவைக்கப்படும்.

10.15 கல்லூரி மண்டபத்தில் வரவேற்பு நிகழ்வு.

10.45 மாணவர் ஒன்றுகூடல்.

11.15 விளையாட்டு நிகழ்வு

அனைத்து பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(5894)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும்.

ஜுலை மாதம் 13ஆம் திகதி Henrican, U.K. மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

மாலை 5.45 மணிக்கு பிரதம விருந்தினரை வரவேற்றல்

6.00 Computer Service Unit திறப்பு.

6.30 பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும்.

8.15 இரவு விருந்து (விடுதிச்சாலை மண்டபம்)

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ புதிய அங்கத்தவர் பதிவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ஹென்றிசியன் குடும்பம்.

(5895)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 ❖ 06 ❖ 1948

ஆண்டவன் அடியில் 03 ❖ 07 ❖ 2000

### அமரர் செல்லத்துரை ஜெகதீஸ்வரன்

*(மக்கள் வங்கி லிகிதர்)*

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிவிளக்கே!
எங்களை நல்மனிதர்களாய் ஆக்க
உங்கள் மேனிதனை மெழுகுவர்த்தியாக்கி
எங்களை விட்டு தூர சென்றதேனோ?
எத்தனை எத்தனை பல்லாண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாது.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

*"புதுவளவு"* *என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:*
*ஏழாலை மேற்கு, ஏழாலை.* (5883) மனைவி, மகன்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராமலிங்கம் சவுந்தரம்

காரைநகர், கருங்காலி, போசிட்டி முருகமூர்த்தி கோவில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் சவுந்தரம் நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராமலிங்கத்தின் (உதவி எரியூட்டுநர்-காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் கதிர்காமநாதன் (சைவம் - ஆய்வுகூடப் பகுதி, சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), கமலராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் வே.இந்திரன் (அதிபர்-அ.த.க.பாடசாலை, இராசேந்திரகுளம்), இராதா ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்வினி, கவிதா, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்போதைய முகவரி:* தகவல்:
*4ஆம் கட்டை,* இ.கதிர்காமநாதன்
*கட்டப்பாலி லேன், ஆனைக்கோட்டை.* (மகன்) (5907)

## கூட்டுறவு அமைச்சருடன் கணக்காய்வாளர் சங்க பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை12

யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகை தரவிருக்கும் கூட்டுறவு அமைச்சர் ஏ.ஆர்.எம்.காதரை யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கணக்காய்வாளர் சங்க அங்கத்தவர்கள் அன்றைய தினம் பிற்பகல் 2மணிக்கு சந்திக்கவுள்ளனர்.

தமது நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சருடன் அவர்கள் கலந்துரையாடுவர். (ம-3)

## கலந்துரையாடல்

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து விறகுகாலை, அரிவுகாலை உரிமையாளர்களுக்கும், மரத்தரகர்களுக்குமான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு வலி.மேற்கு, ஐயனார் வீதி சண்டிலிப்பாயில் உள்ள அரசியல்துறை செயலகத்தில் இடம்பெறும் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

## இன்றைய நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜுலை12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கிறிக்கெட் அணிகளிடையேயான கிறிக்கெட் போட்டித்தொடரில் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. (ம-86)

★ ★ ★

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் வி.க. 'பி', அணியும், கொற்றாவத்தை சிவானந்தா வி.க. அணியும் பங்குபற்றுகின்றன. (ம-ரி)

## திருவாசக விழா

கோப்பாய்,ஜுலை12

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்படும் திருவாசக விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலய மண்டபத்தில் மன்றத் தலைவர் உ.மதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், சைவப்புலவர் கா.கமலநாதன் ஆகியோர் இன்றைய நிகழ்வில் சொற்பொழிவு நிகழ்த்துவர். மாணவர்களின் குரலிசை நிகழ்வும் இடம்பெறும். (எ-72)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜீத், ஜோதிகா, வடிவேல் ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C/22753)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-22754)

லஷ்சுமி இணுவில்.
அஜித், ப்ரியாகில், ரகுவரன்
ரெட்
(கீலஸ்)
தினசரி: 10.30,2.30,6.30 (ப.நே.) (5905)

நாகம்ஸ் சுன்னாகம்
11.00, 3.00 மணி காட்சிகள்
சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த
நந்தா
(கீலஸ்)
பிற்பகல் 6.30மணிக்கு மட்டும்
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
THE WORLD IN NOT ENOUGH
(ஆங்கிலப்படம்)

## இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்கம் யாழ்ப்பாணப் பிராந்தியம்

### விசேட பொதுக்கூட்டம்

*இடம்* :- 14A, அன்னசத்திரலேன், யாழ்ப்பாணம்.

*காலம்* :- 14.07.2002 ஞாயிறு மு.ப. 10.00 மணி.

*முக்கிய தீர்மானங்கள் எடுக்கவிருப்பதால்*
*நிர்மாண ஒப்பந்தகாரர்கள் தவறாது சமுகந்தரவும்.*

(5892) - செயலாளர்.

## மரண அறிவித்தல்கள்

### பரமு கந்தையா (VPK)

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமு கந்தையா நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் தர்மபாலன், விஜயரத்தினம், பரமேஸ்வரி, கனகாம்பிகை, சத்தியலிங்கம், கணேசலிங்கம், இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் நடேசலிங்கம், இரத்தினபூபதி, ரதி, நல்லலிங்கம், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை, களபூமி,* தகவல்:
*காரைநகர்.* (5885) மனைவி, பிள்ளைகள்.

### நவரட்ணம் தெட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பாளர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக்கொண்ட நவரட்ணம் தெட்சணாமூர்த்தி நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நித்தியலட்சுமியின் பாசமிகு கணவரும் மோகனதாஸ் (ஜேர்மனி), ரஞ்சனதாஸ் (டென்மார்க்), பிரேமினா (கனடா), காலஞ்சென்ற சத்தியதாஸ் மற்றும் லோகதாஸ் (டென்மார்க்), பாலதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பலாலி றோட்,* தகவல்:
*திருநெல்வேலி வடக்கு.* (5899) தெ.பாலதாஸ் (மகன்).

### கந்தையா சுப்பிரமணியம்

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகக்கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று (11.07.2002) வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு.பரஞ்சோதியின் அன்புக் கணவரும் சு.மணிவாசகன் (பொதுமுகாமையாளர் - இலங்கை போக்குவரத்துச்சபை, கோண்டாவில்), காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தேவசேனாதிபதி (முத்தையன்கட்டு), சண்முகரட்ணம் (சவூதி), லலிதாம்பிகை (கனடா), யோகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு சு.மணிவாசகன் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவசக்தி வாசா'* தகவல்:
*கட்டைப்பிராய்,* சு.மணிவாசகன்
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (மகன்). (5904)

### கந்தையா வேலாயுதபிள்ளை

(ஓய்வு பெற்ற பரிசாரகர் - அரசினர் வைத்தியசாலை, அக்கராயன் குளம்)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வேலாயுதபிள்ளை 10.07.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக்கணவரும் சிவமலர் (பிரான்ஸ்), பிறேமானந்தன் (ஜேர்மனி), சாந்தநாயகி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனருட்செல்வன், முருகானந்தன், இராஜினி ஆகியோரின் மாமனாரும் திவாகரன், சுதாகரன், காயத்திரி, ரஜீவ், ராஜாஜி, ராகுல் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிருசுவில் வடக்கு,* தகவல்:
*மிருசுவில்.* (5858) த.முருகானந்தன் (மருமகன்).

### V.M.யோசவ் (பொன்னுத்துரை)

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட V.M.யோசவ் அவர்கள் நேற்றுமுன்தினம் (10.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி ஜேற்றூட் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் அன்ரன் (கனடா), ஜெயம் (கனடா), ஆனந்தா யோசவ் (கிங்ஸ்ரன் கல்லூரி, கொழும்பு), அருட்செல்வி மேரி பிரான்சீஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை, சென்னை), ஜெயராஜன் (புனித வளன் அச்சகம்), குமார் (கனடா), திருமதி ஜோசப்பின் ஜெபரத்தினம் (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயசீலி (கனடா), ஜெயராணி (கனடா), காலஞ்சென்ற சுலோஜனா (பண்டத்தரிப்பு) மற்றும் மேரி சறோஜா (ஜெயா), வசந்தி (கனடா), ஜெபரத்தினம் (உப-அதிபர், யா/திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனடாவில் வசிக்கும் சிறின், யூட், சுனித்தா, ரவீந்திரன், டினேஷ், விஜி, பிறென், ஜெயோலின், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் றோஷன், லண்டனில் வசிக்கும் டிலக்ஷன், டயானி மற்றும் மரியனி கயானி, நிஜானி (மாணவிகள்-யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), டனிஷ்ரன் (மாணவன், யாழ்.மத்திய கல்லூரி), ஜோய் மாதவன், ஜோண்சன், திவ்வியானந்த் (மாணவர்கள்-யா/சம்பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் கனடாவில் வசிக்கும் ஜெறோன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.07.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின் பின் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25,மாட்டின் லேன்,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (5906) ஆனந்தா யோசவ் (மகன்).

# துரைரத்தினசிங்கம் எம்.பி. நேற்றுப் பதவியேற்பு!

கொழும்பு,ஜூலை12

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த துரைரத்தினசிங்கம் நேற்று முற்பகல் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஜோஸப் மைக்கல் பெரேரா முன்னிலையில் எம்.பி.யாக தமிழ் மொழிமூலம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப்பட்டியல் எம்.பி.யான எம்.சிவசிதம்பரம் காலமானதை அடுத்து ஏற்பட்ட இடத்துக்கே தேசியப்பட்டியல் எம்.பியாகத் துரைரத்தினசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ம)

## திறப்புவிழா

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத் திறப்புவிழா இன்று காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

## வைகோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு ஒரு மாத சிறையில் அடைக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு மாதகாலத்துக்குள் அவருக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## கல்முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் இருக்கவில்லை.

கல்முனைப் பொலீசார் இவர்களை கல்முனை மாவட்ட நீதிமன்றில் நீதிபதி கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் ஆஜர் செய்தனர். புலிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இசட்.ஏ. அப்துல் ஹக்கிம் அவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரினார். பொலீஸார் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இறுதியில் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். வான் இரண்டரை லட்ச ரூபா முறியில் விடுவிக்கப்பட்டது. விசாரணை 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

## அமைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பேராசிரியர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் இரண்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவார். ஆடை உற்பத்தித் தொழில் தொடர்பாகவும், இலங்கை - அமெரிக்கா இடையே பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும்போது வரிச் சலுகை வழங்குவது தொடர்பாகவும் இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

அதேவேளை இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக பிரதமர் அமெரிக்காவில் கலந்துரையாடுவார்.

இலங்கை அரசின் ஆக்கபூர்வமான மற்றும் துணிகரமான சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் கலந்துரையாடுவாரகள்.

எமது நாட்டுத் தலைவரை சந்திக்க அமெரிக்க ஜனாதிபதி உடனடியாக இணங்கியிருப்பது எமக்குக் கிடைத்த ஒரு வெற்றி. அதையொட்டி நாம் பெருமை அடைகிறோம் - என்றார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹாவின் இலங்கை விஜயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பேராசிரியர் பீரிஸ், அவருடைய விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு மேலும் வலுப்படுத்தப்படும். ஆரம்பத்திலிருந்தே இந்தியா எமது சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது. தற்போது இலங்கை அரசியல் தலைவர்களை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-10)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை பிரதமரைச் சந்தித்த சின்ஹா இரு நாட்டு பொருளாதார உறவுகள் குறித்தும் - சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் - கலந்துரையாடினார்.

இன்று காலை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதியை அவர் சந்திக்கவிருக்கின்றார்.(ம-3-10)

## சகாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் பா.சுப்பிரமணியம் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிமூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் உறவினர்களிடம் சடலங்களை ஒப்படைக்கும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.


தேசிய சேமிப்பு வங்கி

அறிவித்தல்

தேசிய சேமிப்பு வங்கி - சாவகச்சேரி கிளை

மேற்படி கிளை இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை

காலை 9.00 மணிக்கு

யாழ். கண்டி வீதி, சாவகச்சேரியில்

அமைந்துள்ள

வி.எம்.கே. கட்டடத்தில்

எமது தேசிய சேமிப்பு வங்கியின்

வடவலய உதவிப் பொது முகாமையாளர்

திரு. லயனல் திசநாயக்கா

அவர்களினால் மீளவும் ஆரம்பித்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந்நிகழ்வில் வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(5872)



புதிய இடத்தில்
புதிய நிர்வாகத்தில்

கீன் சென்ரர்

பலாலி வீதி, திருநெல்வேலி
(முன்னைய D.C.S. ஒழுங்கையில்)
தரம் 3 முதல் A/L வரை
V.N.பத்மநாதன்
(நிர்வாகி)
(5903)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
☆ தூயே நாகம்மா ☆
வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.
(C/22911)



ஈசன் கல்வி நிலையம்

GENERAL ENGLISH

* சகல மொழித்திறன்களையும் உள்ளடக்கிய விரிவான கற்கைநெறி.
* பாடசாலை செல்லாத உயர்கல்வி மேற்கொள்வோருக்குரியது.

ஆரம்பம் : 13.07.2002 (Sat.) 10.00 a.m.
ஆசிரியர்
த.ந.பஞ்சாட்சரம்
- நிர்வாகி.
(5731)



MS Office

புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம்: 14-07-2002

DIPLOMA IN MICROSOFT OFFICE

இற்கான புதிய விசேட பிரிவுகள் 14.07.2002 அன்று காலை 10மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றன. இப்பிரிவில் இணைந்துகொள்ளும் மாணவர்கள் 14.07.2002 இற்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.
(C/22841)



சொகுசு பயணத்திற்கு

கிலோ மீற்றருக்கு 18 ரூபா மட்டுமே!

அழையுங்கள் 2742

அம்பாள் ரவல்ஸ்
கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.
(5854)



இடமாற்றம்

அனைத்து கொம்பியூட்டர்
ஓவ்( f)செற்
பிறிண்டிங் வேலைகளுக்கும்

கங்கை
ஓவ்(f)செற் பிறிண்டேர்ஸ்
184 A, நாவலர் வீதி
(பிறவுண் வீதிக்கு முன்பாக),
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(5887)



COOL LAMINATION - கவரிடுதல்

நினைவுமலர்கவர், புத்தகக்கவர், விழாமலர்கவர், புகைப்பட அல்பம் என்பன Laminating செய்து கொடுக்கப்படும்.

பிள்ளையார் அச்சகம்,
676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
ஆகக்குறைந்த கட்டணம்
ரூபா 3/=
(5533)



FUJIFILM

உலகத்தின் தலைசிறந்த புகைப்படச்சுருள்
தற்போது யாழ். மண்ணில் விற்பனையாகின்றது.
ஏகவிநியோகஸ்தர்களாக

ஸ்ரீ புஜிற்றல் கலர் லாப்
14, ஸ்ரீவெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம், T.P. 3493.

என்னும் ஸ்தாபனத்தாரை நியமித்துள்ளோம் என்பதை
புகைப்படப் பிரியர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

HAYLEYS Consumer

Hayleys Consumer Products Ltd.
25, Foster Lane, Colombo 10, Sri Lanka.
Phone: 94 1 688956-9,
Fax: 94 1 688971.
(C/22908)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி வல்லிபுரம் சேதுப்பிள்ளை

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் சேதுப்பிள்ளை அவர்கள் நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் பராசக்தி, ஆறுமுகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகநாதன் (கனடா), ரவீந்திரன் (அச்சுவேலி தபால் நிலையம்), கௌசலாதேவி (ஜேர்மனி), லோகநாயகி (கனடா), சிவலோகநாதன் (கனடா), பரலோகநாதன் (கனடா), கெங்காகரன் (கனடா), பிரபாகரன் (கனடா), ஜெனித்தா (கொழும்பு), ஜெயந்தன் (கனடா), ஜெலத்தன் (கனடா), கஜித்தா (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*
(5909)

தகவல்:
ஆறுமுகநாதன் (மகன்).

## தம்பு சிவஞானம் (இரத்தினம்)

உடுவில் தெற்கு, சத்தியபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவஞானம் (இரத்தினம்) நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் உதயசூரியன் (குமார்), அருட்திரு. மதியாபரணம் (தென்னிந்தியத் திருச்சபை, சண்டிலிப்பாய் காந்திஜீ கிராமம் சபை ஊழியர்), வினோதரஜனி (கௌரி), கருணாகரன் (கருணா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமாதேவி, அருள்நாயகி, தேவதாஸ் (மாநகரசபை ஊழியர்), பற்றிமா ஆகியோரின் மாமனும் பிறேமலக்ஸன், மயூரி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), சர்மிலன், ஜோஜன், சலோமி, கிரோமி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதியாராதனை இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சத்தியபுரம்,*
*உடுவில்.*
(5910)

தகவல்:
அருட்திரு. டி.எஸ்.மதியாபரணம் (மகன்).

## ஆறுமுகம் நவரத்தினம்

(வெஞ்சர் நோவூட் நவரத்தினம் கொம்பனி உரிமையாளர்)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.நவரத்தினம் அவர்கள் நேற்று (11.07.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வள்ளியம்மை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சுந்தரம்பிள்ளையின் அருமை மருமகனும் காலஞ்சென்றவர்களான நாராயணசாமி, மங்கையர்க்கரசி, ரத்தினம்மா மற்றும் குமாரசாமி (சட்டத்தரணி), தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி (Colombo), சிவனேஸ்வரி (Colombo), சற்குணநாதன் (Lake House, Commercial Printing Manager), பரமநாதன் (Niranjanas உரிமையாளர்), ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், சிவானந்தன் (Retaired Maharajah Organization), நவரட்ணம் (Malavans), கணேஸ்லிங்கம் (முன்னாள் Technical Office Oman), நாகபூஷணி, விஜயகுமாரி (Australia), யசோதரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2002) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"இரத்தினவாசா"*
*200, பொன்னாலை வீதி,*
*சங்கானை.*
(5911)

தகவல்:
ந.பரமநாதன் (J.P.)
(மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.